கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

1-9-1974

50 காசு



RAAS/B/156 TAM




இவளுக்கு
தன்னம்பிக்கை-
யூட்டுங்கள்.
பாங்க் ஆ:ப்
இந்தியாவில்
இவள் பேரில் சேமிப்புக்
கணக்கு துவங்குங்கள்.

தன் சேமிப்பும்
உடன் தன்நம்பிக்கையும்
வளர்வதை அவள்
காணட்டும்

12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக்கணக்கை தாமே நடத்த





உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 10
செப்டம்பர் 1, 1974
ஆனந்த, ஆவணி, 16

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031



அட்டையில் படிமேலழகன்.

"படி, படி" என்று
சொன்னக் கேட்க வேணுமே
படியாமல் போனா
வாழ்வு துயரம் ஆகுமே!

வண்ணப்படம்:
திருச்சி ஜமீலுத்தீன்

மகோற்கட விநாயகர்

அங்க நாட்டின் தலைநகரமாகிய காத்திரம் என்ற நகரத்தில் இரவுத்திர கேது என்றவன் இருந்தான். இவன் மனைவி சாரதை. இவனுக்குத் தேவாந்தகன், நராந்தகன்என்ற இரு பிள்ளைகள் இரட்டையர்களாகப் பிறந்தார்கள். அவர்கள்வளர்ந்து கலைகள் பயின்றார்கள்.

நாரதர் இவர்களுக்குச் சிவபெருமானுடைய ஐந்தெழுத்தை உபதேசித்து, ''இந்த மந்திரத்தைச் செபித்துச் சிவபெருமானுடைய கருணையைப் பெற்றால் எல்லா நலன்களும் உண்டாகும்'' என்று கூறினார்.

தேவாந்தகனும் நராந்தகனும் கானகம் சென்று, வானகமும் நடுங்க உணவைத் துறந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவம் புரிந்து சிவபெருமானிடம் வரம் பல பெற்றார்கள்.

பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்



சிவபெருமான் ''விநாயகரையன்றி வேறு யாராலும் உமக்கு அழிவில்லை'' என்று வரம் அளித்தார்.

நராந்தகன் பாதாள, மண்ணுலகங்களை வென்று அரசு புரிந்தான். தேவாந்தகன் திருமால் 'திசைமுகன்' தேவேந்திரன் முதலியோரை வென்று விண்ணுலகத்தை அரசு புரிந்தான்.

இவர்களின் கொடுமை தாங்காத மண்ணவரும் விண்ணவரும் வேதனைப் பட்டார்கள்.

காச்யபருடைய மனைவியாகிய அதிதி கணவரைத் தொழுது தேவர்கள் துயர் தீரக் கருணை புரியுமாறு வேண்டினாள். காச்யபர் அதிதிக்கு விநாயக மந்திரத்தை உபதேசித்தார். அதிதி விநாயகரை உபாசனை புரிந்தாள். விநாயகர் சிங்க வாகனத்தில் ஆயிரம் முகங்கள், ஆயிரம் தோள்கள், ஆயிரம் தாள்களுடன் பேரொளிப் பிழம்பாகக் காட்சி தந்தருளினார். அப்பேருருவைக் கண்ட அதிதி அஞ்சினாள். கண்களை மூடிக் கொண்டாள்.

''அருட் கடலே! உமது பேருருவத்தைக் காணும் ஆற்றல் எனக்கில்லை. உலகங்கட்குத் துன்பம் செய்யும்

தேவாந்தகனையும் நராந்தகனையும் அழிக்கும் பொருட்டுத் தேவரீர் எனக்கு மகனாக வர வேண்டும்'' என்று வேண்டினாள். கணேசமூர்த்தி அவள் முன் ஒரு குழந்தையுருக் கொண்டு வந்தார்.

அதிதி அக்குழந்தைக்கு மகோற்கடர் என்று பேர் சூட்டி வளர்த்தாள். மகோற்கடரை வசிட்டர், வாமதேவர், நாரதர் முதலிய முனிவர்கள் வந்து வந்து வணங்கினார்கள்.

தேவாந்தகனுக்கும் நராந்தகனுக்கும் பலப் பல தீய சகுனங்கள் தோன்றின. அவர்கள் மகோற்கடரைக் கொல்லுமாறு பல அசுரர்களை ஏவினார்கள். அப்படி வந்தவர்கள் விளக்கில் வீழ்ந்த விட்டில் பூச்சிகளாக மாண்டு போனார்கள். காசிராஜனுடைய புதல்வியின் திருமணத்துக்கு மகோற்கடர் காசிக்கு எழுந்தருளினார். தான் அனுப்பிய அவுணர்களை மகோற்கடர் கொன்றதை அறிந்த நராந்தகன் படை வீரர்களுடன் போருக்கு வந்தான். காசிராஜனைப் பிடித்துச் சிறையில் அடைத்தான்.

மகோற்கடர் போருக்கு வந்து தமது திருமுகத்திலிருந்து பல வீரர்களை உண்டாக்கினார். நராந்தகனுடன் கடும் போர் நடைபெற்றது. கணை மழை பொழிந்தான் நராந்தகன். அவைகளையெல்லாம் மகோற்கடர் துண்டித்தார்.

நராந்தகன் பேருருக் கொண்டு நின்றான். மகோற்கடரும் பேருருக் கொண்டு தமது திருவடியின் பெருவிரல் நகத்தால் கீறிப் பிளந்து அவனை மாய்த்தருளினார்.

தேவாந்தகன் தம்பியின் அழிவைக் கண்டு மனந் தளர்ந்து போருக்கு வந்தான். பலப் பல மாயப் படைகளை ஏவி மண்ணுலகையும் விண்ணுலகையும் நடுங்க வைத்தான். மகோற்கடர் அவன் ஏவிய ஆயுதங்கள் அனைத்தையும் அழித்துத் தமது கரத்திலிருந்த தந்தத்தால் அவனை அழித்தருளினார் — காசிராஜனைச் சிறைமீட்டார்.

அவன் மகளுடைய திருமணத்தை முடித்துக் காச்யபரிடம் வந்து சேர்ந்தார். உலகம் துயரம் நீங்கி உவகையுற்றது.



அடைக்கலப் பொருள்



அமரர் டி.கே.சிதம்பரநாத முதலியார்

(ரசிகமணி டி. கே. சி அவர்களின் 92வது பிறந்த நாள் கடந்த மாதம் கொண்டாடப்பட்டது. கம்ப ராமாயணத்தை எல்லாரும் ரசித்து மகிழும்படி எளிமையாக்கிச் சொன்னவர் டி. கே. சி அவர்கள். குற்றாலம் அருவி தெரியும் உங்களுக்கு. அதன் அழகு அவர் தமிழ் நடையிலும் இருக்கும். இதோ உங்களுக்காக அவர் எழுதிய ஒரு கதை. — ஆசிரியர்.)


●

அநேகருக்குத் தோன்றலாம்; 'அடைக்கலமாக வந்த பொருள் அப்படிப் போலாத பொருளா, வேண்டுமானால் வைத்துக் கொள்ளுகிறோம், வேண்டாம் என்றால் விட்டு விடுகிறோம், அவ்வளவுதானே?' என்று சொல்லத் தோன்றும்.

ஆனால் உண்மை எப்படி இருக்கிறது?

தம்புச் செட்டித் தெருவில் ஒரு மாடியில் வசித்து வந்தோம். ஒரு நாள் சாயங்காலம் சிறு பூனைக் குட்டி ஒன்று மாடிக்கு வந்தது. தாயைவிட்டு எப்படியோ பிரிந்துவிட்டது. பால் குடிக்கிற நேரம்; கத்துகிறது. ஒரு பீங்கான் தட்டில் பால் வைத்தோம். பாலைக் குடித்துவிட்டது குட்டி. தாய் எப்படியும் வரும், குட்டியை எடுத்துக்கொண்டு போய்விடும் என்று பார்த்தோம். ஆனால் அது வரவில்லை. இரவு படுக்கப் போகும் போதும் குட்டிக்குப் பால் வைத்தோம். பாலைக் குடித்துவிட்டு அமைதியாய் ஒரு மூலையில் படுத்துக் கொண்டது குட்டி.

நாள் இரண்டு, மூன்று என்று ஆயிற்று. தாய்ப் பூனை வந்த பாடாக இல்லை. சரி, போகட்டும் என்று குட்டிக்கு ஒழுங்காய்க் காலாகாலத்தில் பால் வைத்து வளர்த்தோம்.



மாசம் இரண்டாகிவிட்டது. விடுமுறைக்காக ஊருக்குப் புறப்பட வேண்டியதுதான்.

பூனைக் குட்டியை என்ன செய்கிறது? பக்கத்தில் உள்ளவர்களிடம் வளர்க்கிறீர்களா என்று கேட்டோம். , அது கஷ்டம், முடியாது என்று சொல்லிவிட்டார்கள். பால் விட்டு வளர்க்கவேண்டிய காரியமல்லவா ?

என்னத்தைச் செய்கிறது ? சரி, ஊருக்குக் கொண்டு போக வேண்டியது தான் என்ற தீர்மானத்துக்கு வந்தோம்.

படுக்கை பெட்டிகளை ரயில் பிரயாணத்துக்காகக் கட்டிக் கொண்டிருந்தோம். கட்டிக் கொண்டிருந்ததை எல்லாம் பூனைக் குட்டி பார்த்துக் கொண்டே யிருந்தது.

பூனைக் குட்டியை விட்டுவிட்டுப் போய்விடலாமா என்ற எண்ணம் வந்தது. ஆனால் அதன் முன்னிலையில் அந்த விஷயத்தை வாய்விட்டுச் சொல்லத் துணியவில்லை.

'சரி, ஊருக்குக் கொண்டு போகவேண்டியதுதான்' என்று சொல்லிக் கொண்டோம், நண்பரும் நானும்.

கடைசி வரை தாய் வந்துவிட்டால் ஒப்படைத்துவிடலாம் என்று எண்ணினோம். ரயிலுக்குப் புறப்படுகிற நேரம் வரை பார்த்தோம். தாய் வரவில்லை.

ஒரு மாம்பழக் கூடையை எடுத்து அதற்குள் பூனைக் குட்டியைப் போட்டு மூடியைச் சடம்புக் கயிறு கொண்டு கட்டி, ஜட்கா வண்டியில் வைத்து, ரயில் வண்டியிலும் ஏற்றி, ஊருக்கே கொண்டு வந்து சேர்த்தோம்.

வீடு வந்து சேர்ந்ததும், வீட்டில் உள்ளவர்கள் சாமான்களை ஐடுதி பார்த்தார்கள். கூடைக்குள் பழம் இருக்கிறதா என்று பார்த்தார்கள். பூனைக் குட்டிதான் இருந்தது !

''இங்கே பூனை இல்லை என்று இந்த அபூர்வமான சரக்கைக் கொண்டு வந்துவிட்டீர்கள்?'' என்றார்கள்.

எங்களுக்குப் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இப்போது நமக்கு விளங்கும் நம்முடைய பழைய கதை.

பெண் பேய் ஒன்று காட்டில் அலைந்து திரிந்து கொண்டிருந்தது. ஒரு நாள் வழிப் பாதையில் இருந்துகொண்டு வருகிற ஆடவன் யாரை யாவது பிடித்துக் கொள்ள வேண்டும் என்று காத்துக்

கொண்டிருந்தது. சாயங்கால நேரம். ஒரு வணிகன் பாதையில் வரக் கண்டு கொண்டது.

வணிகனது மனைவியாய் உருவெடுத்துக் கொண்டு ஒரு குழந்தையையும் ஒக்கலில் வைத்துக் கொண்டது. வணிகன் நெருங்கி வரவும் பின் தொடர்ந்து அவனோடு பேச்சுக் கொடுத்தது. தொடர்ந்து வருவது பேய்தான் என்று வணிகன் தெரிந்து கொண்டான். எப்படியோ தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு விரைவாக முன்னேறி நடந்தான். பேயும் தொடர்ந்தே வந்தது. அந்தி மயங்குகிற நேரம். பழையனூர் என்ற கிராமம் கிட்டிவிட்டது. இனி பயமில்லை. ஊர்தான் கிட்டிவிட்டதே என்று கொஞ்சம் ஆறுதலோடு நடந்தான் வணிகன். பேய் தொடர்ந்து வராது என்றும் எண்ணினான். ஆனால் அது வந்து கொண்டுதான் இருந்தது.


வழி மேல் ஊர் அம்பலம் இருந்தது. அங்கே ஐந்து பேர் வேளாளர் இருந்து கொண்டு ஊர் வழக்குகளைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் பேய் 'ஓ'வென்றலறியது. யாரோ பெண் ஆயிற்றே என்று பேயை அழைத்து ஏன் அழுகிறாய் என்று கேட்டார்கள் பஞ்சாயத்தார்கள்.


'இதோ போகிறவர் ஒரு வணிகர். அவர் தொட்டுத் தாலி கட்டிய மனைவி நான். குழந்தையையும் என்னையும் தெருவில் விட்டு விட்டுப் போகப் பார்க்கிறார். நாங்கள் அனாதைகள். அவரை விட்டு நாங்கள் எங்கே போவது? நீங்கள்தான் கருணை செய்து அவரை எங்களிடம் இரக்கம் கொண்டு எங்களை அங்கீகரிக்கும்படி செய்ய வேண்டும்' என்று கண்ணீர் வடிய முறையிட்டது பேய். பார்த்தார்கள் பஞ்சாயத்தார்கள். அவர்கள் மனம் இளகிவிட்டது.

வணிகனை விசாரித்தார்கள். அவன், ''ஐயா! இது என் மனைவியுமல்ல ஒன்றுமல்ல. இது ஒரு பேய். காட்டில் திரிந்து கொண்டிருந்தது. என்னைத் தொடர்ந்து வருகிறது. என்ன செய்யப் போகிறதோ தெரியவில்லை'' என்றான்.

''பேயாவது ஒன்றாவது! நகைகளைப் போட்டுக் கொண்டு, காஞ்சீபுரம் சேலையை உடுத்திக் கொண்டு குழந்தையையும் ஒக்கலில் வைத்துக் கொண்டு தெரு வழியே வருமோ பேய்? அழகாய் இருக்கிறது'' என்றார்கள் பஞ்சாயத்தார்கள்.

வணிகன் என்னவெல்லாமோ ஆத்திரம் ஆத்திரமாகச் சொல்லிப் பார்த்தான். பஞ்சாயத்தார் காதில் அதெல்லாம் விழுவதாக இல்லை. அதன் பேரில்





வாடா மலர்

நல்ல காரியங்களை நாமாகத் தேடிச் செய்ய வேண்டுமே தவிர, நல்ல காரியங்கள் தாமாக வந்து சேர்வதில்லை.

— கார்பீல்டு

நல்லசேவைக்கு வேண்டிய ஆற்றலைக் கெட்ட மனிதரிடம் காண முடியாது.

— பர்க்

மனைவி என்பதற்குச் சாட்சியம் உண்டா என்று பஞ்சாயத்தாரைக் கொண்டு கேட்கச் சொன்னான். அவர்களும் கேட்டார்கள் பெண்ணைப் பார்த்து.

''நன்றாய்ச் சொன்னீர்கள் ஐயா! அவரைக் கொஞ்சம் உட்காரச் சொல்லுங்கள். அவருக்குத்தான் தெரியாது, பெண்சாதி பிள்ளை என்பதெல்லாம். ஆனால் பிள்ளைக்கு அப்பாவை நன்றாய்த் தெரியும்'' என்று சொல்லி ஒக்கலிலிருந்த பிள்ளையைக் கீழே இறக்கிவிட்டாள். பிள்ளையும் தவழ்ந்து போய் வணிகனது மடியில் உட்கார்ந்துகொண்டது. வேறு சாட்சியம் என்ன வேண்டும்?

''வணிகனே! நீ சுத்த அசடு. மனைவியோடு வாழத் தெரியாத அசடு. மனைவியை வாய் கூசாமல் பேய் என்று சொல்லுகிறாய், கதை வேறு கட்டுகிறாய். பேயாம்! நீதான் பேய். ஒன்றும் பேசாதே!'' என்று அதட்டிவிட்டார்கள் பஞ்சாயத்தார்கள். அப்பாவி வணிகனுக்குப் பேச வாய் எழவில்லை.

''சரி, சரி, இவ்வளவு நேரத்துக்குப் பிறகு பெண்களைக் கூட்டிக் கொண்டு உன் ஊருக்குப் போகிறதென்பது கூடாத காரியம். அமாவாசை இருட்டு. வழியில் பேய் ஒன்றும் கிடையாதுதான். ஆனால் கள்ளர் பயம் உண்டு. காதிலே கழுத்திலே நகையைப் போட்டுக் கொண்டுபோகிற காரியம் உதவவே உதவாது. நீயும் மனைவியும் இங்கேயிருந்து சாப்பிடுங்கள். சாப்பிட்டுவிட்டு, இதோ காலி வீடு. இதில் படுத்திருந்து விடிந்ததும் சௌகரியமாய் ஊருக்குப் போங்கள்'' என்று சொல்லிவிட்டார்கள் பஞ்சாயத்தார்கள்.

வேலையாட்கள் வந்து சாப்பாடு போட்டார்கள். வணிகன் சாப்பிட்டான். இன்று எனக்கு விரதம். சாப்பாடு வேண்டாம் என்று சொல்லிவிட்டது பேய்.

சரி, வீட்டுக்குள் படுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுப் பஞ்சாயத்தார்களும் தங்கள் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

போகிற வழியில் ஒரு பஞ்சாயத்தார், ''எல்லாம் சரியாய்ப் போய் விடும். விடியற்காலம் பாருங்கள்'' என்றார். அவரோடு ஒட்டியே மூன்று பேர் பேசினார்கள். ஆனால், ஐந்தாவது ஆசாமியோ சிறிது நேரம் ஒன்றும் பேசாது இருந்தார். பிறகு, ''அந்த மனிதனது திகைப்பும் பயமும் ஒரு மாதிரியாகத்தான் இருக்கின்றன. அப்பாவியாகத்தான் இருக்கிறான் அவன். அவனைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது'' என்றார்.

இந்த வார்த்தை மற்றவர்களையும் சிந்தனையில் ஆழ்த்தியது. எல்லோரும் மெள்ள நடந்தார்கள். எல்லாம் விடிந்தால் தெரிகிறது என்று சொல்லிவிட்டு அவரவர்கள் வீட்டுக்குப் போனார்கள்.

விடிந்ததோ இல்லையோ, வணிகனும் மனைவியும் எப்படி இருக்கிறார்கள் பார்ப்போம் என்று வந்தார்கள் பஞ்சாயத்தார்கள்.

வீட்டுக் கதவு திறந்து கிடந்தது. உள்ளே புகுந்தார்கள். வணிகனது உடல் தரையில் கிடந்தது. உயிரில்லை. மனைவியும் பிள்ளையும் வீட்டில் எங்கும் இல்லை.

''ஆம். பேய்தான் வணிகனைக் கொன்றுவிட்டது. நம்மை வஞ்சித்து விட்டது. என்ன பாவத்துக்கு உள்ளாய்விட்டோம்!'' என்று தங்களுக்குள் நொந்து கொண்டார்கள்.

பெரிய குழியாக ஒன்று தோண்டச் சொன்னார்கள் அந்த வேளாளர்கள். இருபது வண்டி கட்டைகளைப் போட்டுப் பெருந் தீ வளர்க்கச் சொன்னார்கள். தீ வளர்ந்து பக்கத்தில் நின்ற தென்னை களின் உச்சியை நோக்கிக் கொண்டிருந் தன சுவாலைகள்.

வேளாளர் இவரும் அப்படியே குழிக் குள் குதித்து விட்டார்கள், கைகோர்த்த வண்ணமாக.

அந்தத் தருணத்தில் அரசன் அங்கு வர நேர்ந்தது. விஷயத்தைக் கேட் டறிந்தான். ''யார் இவர்களுக்குச் சமானம்? எப்படி அறத்தை வளர்க்கி றார்கள்! குற்றங் குறை இல்லாத தேகத் தின் உறுப்புக்களை அறுத்துக் கொடுத்து ஒரு புறாவைக் காப்பாற்றிய சிபிச் சக் கரவர்த்தி ஒருவனே, சத்திய தர்மத்தை நெருப்பில் விழுந்து காப்பாற்றிய இந்த வேளாளருக்குச் சமானம் ஆவான்!

ஏதோ வழியில் வந்தான் வணிகன். அவன் ஓர் அடைக்கலப் பொருளாய் விட்டான். அவ்வளவுதான். அவனுக் காக உயிரையே மாய்த்துக் கொள்ளா மல் தீராது என்று ஏற்பட்டு விட்டது.

உதறித் தள்ளுகிற காரியமா அடைக் கலப் பொருள்!

(முப்பதாண்டுகளுக்கு முன்பு 'குமரி மலர்'ில் எழுதியது இது.)

ஓ, அப்படியா?

கிட்டு: சன்யாசி நண்டாரே (Hermit Crab) நீர் தூக்கிக் கொண்டு செல்வது நத்தையின் கூடல்லவா? உமக்கென்று வீடு கிடையாதா?

நண்டு: உங்களில் எல்லாருமே சொந்த வீட்டிலா வசிக்கிறீர்கள்? வாடகை வீட்டில் எவ்வளவு பேர் வாழ்கிறார்கள்? அப்படித்தான் என் நிலையும். ஆனால் இந்த வீட்டுக்கு வாடகை ஏதும் கிடை யாது. கெட்டியான ஓடுள்ள வகை யைச் சேர்ந்தவனானாலும் எனக்கு இயற்கை ஏனோ மிருதுவான உடலையே கொடுத்திருக்கிறது. அது மட்டுமல்ல. அதைக் காப்பாற்றிக் கொள்ள எவ்வித மான ஓட்டையோ கூட்டையோ அளிக்கவில்லை. அதனால்தான் இந்த இரவல் வீட்டு வாழ்வு. இறந்த நத்தை யின் கூட்டுக்குள் புகுந்து கொண்டு பிழைப்பை நடத்த வேண்டியுள்ளது.

கிட்டு: இந்த நத்தைக் கூட்டை நம்பி நீங்கள் மட்டுமல்லாமல் இன்னும் பலரும் கூட வாழ்கிறார்கள் போலிருக் கிறதே? அதோ அந்தக் கூட்டின் மீது ஏராளமான சிப்பிப் பூச்சிகள் ஒட்டிக் கொண்டு இருக்கின்றனவே?


நண்டு: அதுவா? ஆமாம். ஒரு பெரிய கட்டிடத்தில் பல குடும் பங்கள் சேர்ந்து வாழ்கிறீர்களில்லையா நீங்கள்? ஒண்டுக் குடித்தனம்தான்!


கிட்டு: ஆமாம். ஃபிளாட் சிஸ்டம் என்று பெயர் அதற்கு.

நண்டு: அது என்ன கஷ்டமோ! நாங்கள் ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ் கிறோம் இந்த ஒரே கூட்டில். மேலே தானே நீ சிப்பிப் பூச்சிகள் ஒட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறாய். கூட்டி னுள்ளே ஒரு புழுவும் என்னோடு வசிக் கிறது. நான் இரை தேடக் கூட்டை விட்டு வெளியே வரும் போது அதுவும் வெளியே வரும். சில வேளைகளில் என் கையிலிருந்தே உணவை எடுத்துச் சாப் பிடும். வயிறு நிறைந்ததும் எனக்கு முன்னால் கூட்டுக்குள் போய் விடும். இந்த ஒற்றுமை ஒரே இனமாக வாழும் உங்களிடம் உண்டா?

கிட்டு: கிடையாதுதான். நான் கூடப் படித்திருக்கிறேன், உன்னால் அதற்கோ அதனால் உனக்கோ எவ்விதப் பயனும் கிடையாதென்று.

நண்டு: ஓ, அப்படியா? — என்று கூறியபடி கூட்டுக்குள் புகுந்துகொண்டு அதைச் சுமந்தபடியே வேகமாகக் கடல் நீருக்குள் சென்றது அந்தச் சாமியார் நண்டு.





ஆயக்காரன்

வெண்மணி என்பது ஓர் அழகான சிறு கிராமம். அதில் தனஞ்செயன் என்ற ஒரு வணிகன் மளிகைக் கடை வைத்திருந்தான். மாதம் தோறும் அடுத்த நகரத்தில் உள்ள சந்தைக்குப் போய்ச் சாமான்களைத் தோளில் சுமந்து வருவான். வரும் வழியில் சுங்கச்சாவடி உண்டு. அதில் இருப்பவன் ஆயக்காரன். இவன் கொண்டு வரும் சாமான்களுக்கு அளவுக்கு அதிகமாகவே பணம் வசூலிப்பான். அதற்காக வணிகன் அந்த வழியாக வராமல் காட்டுக்குள்ளே புகுந்து ஒற்றையடிப் பாதை வழியாக வர ஆரம்பித்தான்.

ஒரு நாள் அந்த வழியாக வந்து கொண்டிருக்கும்போது பின்னால் இருந்த மரத்திலிருந்து, ஏதோ சத்தம் கேட்டது. அந்த மரத்திலே ஒரு சின்ன பூதம் இருந்தது. அதை நினைத்து அவன் ஓட்டமாய் ஓடினான். மூட்டையின் கனம் தாங்காமல் களைத்துப் போய்க் கீழே போட்டுவிட்டு நின்று திரும்பிப் பார்த்தான். குட்டி பூதம் துரத்தி வருவது தெரிந்தது. உடனே கை தட்டிச் சிரித்தான். சிரித்து, ''ஓகோ! நீதானா? நான் ஆயக்காரன் என்றல்லவா நினைத்தேன்?'' என்றான்.

பூதம் கொஞ்சம் திகைத்தது. ''ஆயக்காரனா? அவன் என்னைவிடப் பொல்லாதவனா?'' என்று கேட்டது.

''ஆமாம், ரொம்பப் பொல்லாதவன்தான். உனக்குக்கூடக் காட்டுவேன். நீ இப்படியே வந்தால் பார்க்க முடியாது. ஒரு கோணிப் பைக்குள் புகுந்து கொள். கட்டிக் கொண்டு போய்க் காட்டுகிறேன்!'' என்றான்.

பூதம் கோணிக்குள் புகுந்து கொண்டது. அதன் வாயைக் கட்டினான். தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு நடந்தான்.

பூதம் கனக்கவே யில்லை. தோளில் போட்டுக் கொண்டு சுங்கச்சாவடிக்குப் போனான்.

''என்ன மூட்டை?'' என்றான் ஆயக்காரன்.

''புளி மூட்டை'' என்றான் செட்டி.

''கீழே போடு!'' என்றான் ஆயக்காரன்.

பொத்தென்று போட்டான் வணிகன். மூட்டையைப் புரட்டிப் பார்த்தான் ஆயக்காரன்.

'' என்ன, கனக்கவே யில்லையே!'' என்றான்.

''புளிதான், புதுப் புளி!'' என்றான்.

ஆயக்காரன் குத்தூசியை எடுத்து நாலா பக்கமும் குத்தினான்.

பூதம் தவித்துப் போய்விட்டது.

''இந்த மூட்டை அதிகப் புளுவு இல்லை. ஆகவே நீ எடுத்துப் போ!'' என்றான் சுங்கக்காரன்.

வணிகன் பூதம் வசிக்கிற மரத்துக்கு வந்து அவிழ்த்து விட்டான்.

பூதம் பயந்து நடுங்கி அவனைப் பார்த்து, ''நல்ல வேளை! இந்தமட்டும் பிழைத்தேன். இன்னும் சற்று நேரம் இருந்தால் அந்த ஆயக்காரன் என்னைக் கொன்றிருப்பான். உன்னால்தான் பிழைத்தேன். உனக்கு ஏதாவது வெகுமதி தருகிறேன். என்னிடம் பணம்

காசு கிடையாது. ஆகையால் நான் காசி தேசத்து ராஜா பெண்ணுக்கு அருகில் உட்கார்ந்து கொள்ளுகிறேன். ஆனால் பிறருக்குத் தெரியாது. பெண் பயந்து அழுவாள். ராஜா மந்திரவாதிகளைக் கூப்பிடுவான். நீ போய் மந்திரம் போடுவதாகச் சொல்லு. உன்னைப் பார்த்ததும் நான் ஓடிப் போய்விடுகிறேன். உனக்கு நிறையப் பணம் தருவார்கள்'' என்றது.

வணிகன் தனது மூட்டைகளை எடுத்துக் கொண்டு கிராமத்துக்குத் திரும்பினான். சில நாட்களுக்கெல்லாம் காசிராஜா மந்திரவாதி வேண்டும் என்று தமுக்குப் போட்டான். இதுதான் சமயம் என்று வணிகன் காசிக்குப் போனான். இவனைக் கண்டவுடனே பூதம் ஓடிப் போய்விட்டது. பெண் பயம் இல்லாமல் சந்தோஷமாக இருக்க ஆரம்பித்தாள். காசி ராஜா நிறையப் பணம் கொடுத்து அனுப்பினான்.

ஒரு மாதம் கழிந்தது. அடுத்த தேசத்து ராஜா பெண்ணுக்கு இதே மாதிரி பயந்த கோளாறு என்று காசிராஜாவுக்குத் தெரிந்தது. உடனே வணிகனை அழைத்தான். வணிகனுக்கு உள்ளூற பயம். நாம் இரண்டாம் தடவை போனால் பூதம் என்ன செய்யுமோ? அடித்துவிடுமோ என்று இவனைப் பார்த்ததும் பூதம் கோபம் கொண்டு ஓடி வந்தது.

முதலில் பயந்து பின்வாங்கினான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''பூதமே! நான் உன் சொல்லை மீறி வரவில்லை. ஆயக்காரன் உன்னைத் தேடிக் கொண்டு வருகிறான். அதைச் சொல்லவே ஓடி வந்தேன்!'' என்றான்.


பூதம் ஓட்டம் பிடித்தது.

அரசன் நிறையப் பரிசுகள் வழங்கினான். இரண்டு மூன்று மாதங்கள் ஆயின. வேறு ஒரு ராஜாவின் பெண்ணுக்குப் பூதத்தினால் பயம். அவர்களும் இவனைக் கூப்பிட்டார்கள். இவனுக்கு 'சரி நமக்கு முடிவு காலம் வந்துவிட்டது' என்று மனத்தில் நினைத்து மனைவி மக்களிடம் விடை பெற்று அந்தத் தேசத்துக்குப் போனான். அங்கேயும் நல்ல வரவேற்பு. ராஜகுமாரி அழுது கொண்டு உட்கார்ந்திருந்தாள். இவனைப் பார்த்தவுடன் பூதம் கையை ஓங்கிக் கொண்டு வெகு கோபத்துடன் அறைய வந்தது.

இவன், ''பூதமே! ஒரு சுப சமாசாரம் சொல்லவே வந்தேன். ஆயக்காரன் இறந்து போய்விட்டான். எனக்காக இனிமேல் இந்த வட்டாரத்தில் யாரையும் பயமுறுத்தாதே. அது உன்னுடைய நன்மைக்கே'' என்று சொல்லி முடித்தான்.

பூதம் இனி மேல் யாரையும் பயமுறுத்துவதில்லை என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டது. ஏராளமான பரிசுப் பணத்துடன் வணிகன் வீட்டுக்குத் திரும்பினான்.

ஸரஸ்வதி ராஜகோபால்






மேலே: சாதாரண நத்தை. அது செல்லும் பாதையில் பளபளக்கும் கோடு.

நத்தையும் அட்டையும்

மழைக் காலம் ஆரம்பமாகி விட்டது. இப்போது நீங்கள் தோட்டங்களில் பல அற்புதங்களைக் காணலாம். பல ஜீவ ராசிகள் பல்கிப் பெருகிப் பரவசப் படும் காலம் மழைக் காலம். தாவரங் களில் பலவற்றுக்கும் கொண்டாட்ட மும் குதூகலமும் தரும் காலம் இது. அதிகாலையில் தோட்டத்தில் பார்த்தீர் களானால் கல் தரையில் நீரால் கோலம் போட்டது போலக் குறுக் கும் நெடுக்குமாகப் பல கோடுகளைக் காணலாம். இந்தக் கோலக் கோடுகளை உன்னிப்பாகக் கவனித்தீர்களானால், அதில் ஒரு பளபளப்பு இருப்பதையும் அது கெட்டிப்பட்ட கொழகொழப் பான ஒரு பொருள் என்பதையும் அறிய லாம். இந்தக் கோடுகளை வரைந்தது நத்தையோ அல்லது அட்டையோவாக இருக்கலாம். அவ்வளவு சுலபமாக இவைகளைக் காணமுடியாது. இவை களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.

அட்டை என்பது முதுகில் ஓடில்லாத ஒரு வகை ஜந்து. நத்தை இனத்தைச் சேர்ந்ததுதான். இவ்விரண்டுமே மிருது வான உடலைக் கொண்ட பிராணி வகைகளைச் சேர்ந்தவை. வெகு நேரம் காற்றோட்டமான இடத்தில் இவை இருக்குமானால் இவற்றின் உடல் காய்ந்து போகும். ஆனால் இவை இப் படிக் காய்ந்து போகும்படி வாழ்வ தில்லை. அட்டைகள் பூமிக்குள்ளே, கற்களுக்கு அடியிலே மறைந்துகொள் ளும். நத்தைகள் தங்கள் உடலைக் கூட்டுக்குள் இழுத்துச் சுருக்கிக்கொண்டு காப்பாற்றிக் கொள்ளும். காற்றில் ஈரம் இருக்கும்போதுதான் இவை வெளியே கிளம்பும். முக்கியமாக இரவு வேளைகளிலும் விசேஷமாக மழை பெய்த பிறகுமே நத்தைகளும் அட்டை களும் உலாவக் கிளம்பும். அப்போது தானே மண்ணும் காற்றும் ஈரப் பசை யோடு இருக்கும்?

இவைகளைக் கண்ணாடிமீது நகரச் செய்து பார்த்தால் உடலின் அடிப் பாகத்தில் அலை அலையாக அடுத்தடுத்து வளையங்கள் உண்டாவதைக் காணலாம். ஒவ்வோர் அலை வளையமும் பூமியைக் கவ்வி அழுத்திக்கொள்ளப் பிராணியின் உடல் முன்னேற உதவுகிறது. பூமியின் மேற்பரப்புக்கு ஏற்றபடி வளைந்து கொடுக்கும் தன்மை உடையது நத்தையின் அடிப்பாகம். நத்தை நகரும் போது, கூட்டிலிருந்து முன்னால் தலையும் பின்னால் வாலும் வெளி வந்து தரை யைப் பற்



கீழே: 1. தோட்ட நத்தை. 2, 3, 4, 6. நத்தைகளில் பல வகை. 5. ரோமானிய நத்தை. 7. குட்டையிலுள்ள பெரிய வகை நத்தை.

றிக் கொள்ளும். உடலின் மற்றப் பாகங்களின் மீது நத்தைக் கூடு இருக்கும். நத்தை உடலின் முக்கிய பாகங்கள், சுருண்டுள்ள இந்தக் கூட்டினுள்தானிருக்கின்றன. தலையில் குச்சி போல் நீட்டிக் கொண்டிருக்கும், உணர்ச்சிக் கருவிகளின் நுனியில்தான் நத்தை அட்டைகளின் கண்கள் இருக்கின்றன. இவற்றின் வாய் எங்கிருக்கிறது தெரியுமா? தலைக்குக் கீழே. காட்சிச் சாலைகளில் கண்ணாடித் தொட்டிக்குள் இருக்கும் நத்தையை உற்றுக் கவனித்தால் அடிக்கடி இது தன் உதடுகளைத் திறப்பதும் மூடுவதுமாக இருப்பதைக் காணலாம். இதன் வாயிலிருந்து ஏதோ ஒன்று வெளியே தள்ளப்படுவதையும் பிறகு மறுபடியும் அது உள்ளே சுருண்டு கொள்வதையும் கூடக் காணலாம். இதுதான் இவற்றின் நாக்கு. இதை 'ராடுலா' (Radula) என்பார்கள். மற்ற மிருகங்களின் நாக்கைப் போலிருக்காது இது. ஒரு ரிப்பனில் ஏராளமான சின்னஞ் சிறு பற்களைப் பொருத்தியது போலிருக்கும். நத்தை தாவரங்களின் மீதாக ஊர்ந்து செல்லும்போதே தன் நாக்கினால் தாவரங்களைச் சுரண்டும். இப்படிச் சுரண்டிய தாவரத் துகள்களை நாக்கை உள்ளுக்கு இழுத்துச் சுருட்டிக் கொள்வதன் மூலம் உள்ளே கொண்டு செலுத்துகிறது. இதன் நாக்கில் அரத்தைப்போல் பற்கள் உண்டு. அவை அடிக்கடி நாசமாகும். அப்போது அந்த இடத்தில் புதிய பற்கள் முளைக்கும். இப்படி இவற்றின் வாழ்நாள் முழுவதும் பழுதுறும் பற்களுக்கு மாற்றுப் பற்கள் முளைத்துக் கொண்டேயிருக்கும். அட்டைகளும் கூட இதே முறையில்தான் உணவு உட்கொள்கின்றன.

நத்தைகள் சுவாசிப்பது எப்படி?

தோட்டத்து நத்தைக் கூட்டின் திறந்த முன் பாகத்து விளிம்பில் கெட்டியான 'காலர்' போன்ற அமைப்பைக் காணலாம். இதுதான் நத்தையின் நுரையீரல். இதன் மூலமாகத்தான் நத்தைகள் சுவாசிக்கின்றன. அட்டைகளும் இப்படியே சுவாசிக்கின்றன. இவற்றுக்கு முதுகில் கூடு இல்லையாதலால் இந்த உருப்பை இலகுவாகக் காண முடியாது. அட்டை செய்ய முடியாத ஒன்றை நத்தையினால் செய்ய முடியும். தன் தலை வால், உடல் முழுவதையும் கூட்டுக்குள் சுருக்கிக்கொண்டு நத்தை மறைந்துவிடும். அட்டைக்குக் கூடு கிடையாதே. ஆகவே எங்கே ஒளிந்து கொள்ளும்? அதை நீ துன்புறுத்தும்போது அட்டைகள் உடலைச் சுருக்கிக் கொள்ளும். அப்போது அது கட்டையாகக் கெட்டியாகிவிடும்.




அட்டைகளில் பல வகை.

நத்தைகள் கூட்டுக்குள் தங்களை முடக்கி அதன் வாசலைத் தங்களுடைய கெட்டியான உமிழ் நீரினால் மூடிக் கொண்டு பருவ நிலைகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளுகின்றன. கோடையில் உக்ரமான உஷ்ணம் தங்களை உலர வைக்காதிருக்கவும் இப்படியே செய்கின்றன. நத்தைகளும் அட்டைகளும் தாவரங்களுக்கு மிகுந்த சேதம் உண்டாக்குகின்றன.

நத்தைகளிலேயே மிகப் பெரியது நிலத்தில் வாழும் ஆப்பிரிக்க நத்தைகள் தான். ஓர் அடி நீளம் வரை இதன் உடல் இருக்கும். கூடுகளோ எட்டங்குலம் வரை. இதற்கு அடுத்தபடியாக ஐரோப்பா இங்லொந்து ஆகிய இடங்களில் காணப்படும் ரோமானிய நத்தை. ஓர் ஆப்பிரிக்க நத்தை தன் முதன் மூன்று வருட வாழ்வில் சுமார் 8,000 மிலியன் முட்டைகளை உற்பத்தி செய்கின்றன. இத்தனை முட்டைகளும் பொரிந்து நத்தைகளானால் உலகம் என்னாகும்? ஆகவே முட்டை நிலையிலேயே இவை பிற ஜீவராசிகளுக்கு உணவாகி இவற்றில் பெரும் பகுதி அழிகின்றன. அது மட்டுமல்ல. பல இடங்களில் மனிதர்கள் நத்தைகளை விரும்பி உண்கிறார்கள். அதனால்தான் ஏதோ நாமும் பிழைத்தோம்.


சுறுசுறுப்பான பாதையில் நத்தை போகும் போது அதன் உடல் அமைப்பு இது.



இதோ இங்கு உறங்கும், உத்தம லட்சணங்கள் பொருந்திய 'இப்பெண்யா நான் தேடி வந்திருக்கும் சீதா தேவியா? சீச்சீ.... இருக்காது. கற்பரசியான என் தேவியா ராவணன் அருகில் இப்படி...?
ஜெய் ஹநுமான் 19
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
நான் அவசரப்பட்டு விட்டேன். இவள் ராவணனின் மனைவி மண்டோதரி.. என் அன்னை இங்கு இப்படி உறங்க மாட்டாள்.
ஹநுமான் தனக்கு உதவுமாறு தெய்வங்களைத் துதித்தார்.
தேவர்களின் அருளால் ஹநுமாருக்கு அசோகவனம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது.
ஆஹா! அதோ நான் தேடியலையும் தேவியார். இளைத்த மேனி. தூசு படிந்த ஆடை, கண்ணீர் உகுத்தபடி தூங்காமல்... ஐயோ, என்ன பரிதாபம்?
இரவு மூன்றாம் ஜாமத்தில் ராவணன் சீதாதேவியைக் காண வருகிறான் அசோகவனத்துக்கு.
இந்த நேரத்தில் இக்கொடியவன் எதற்காக வருகிறான்?


சீதா!
இன்னுமா உன் மனம் மாறவில்லை? அந்தப் பிச்சைக்காரனை மறந்து விடு. உயிரைச் சுக போகத்தில் வாழ வைக்கிறேன், என் மனைவியாகி விடு...
பாவி, பிறன் மனைவியை விரும்பும் உனக்கு விநாச காலம் வந்து விட்டது. நீயாக என்னைக் கொண்டு போய் அவரிடம் சேர்ப்பித்தால் பிழைக்கலாம். இல்லாவிடில் என் நாயகனின் அம்பு உன் தலையைக் கொய்யப்போவது நிச்சயம்.
உன் மேலுள்ள ஆசையால் நீ பேசிய பேச்சுக்களை மன்னிக்கிறேன். உனக்கு இன்னும் இரண்டு மாத அவகாசம் தருகிறேன். அதற்குள் உன் மனதை மாற்றிக் கொள்ளாவிடில் இந்த அரக்கிகளுக்கு உன்னை உணவாக்கி விடுவேன்.....
இராவணனின் உத்திரவுப்படி அரக்கிகள் சீதையைப் பல விதமாக இம்சிக்கின்றனர்.
எங்கள் ராஜாதிராஜனை மணக்க உனக்கென்ன கசக்கிறதா?
சம்மதிக்காவிடில் இதோ பார்..
ஐயோ! என்ன கொடுமை..
அரக்கிகள் ஒருவழியாகத் தூங்குகிறார்கள் அப்போது....
இனியும் இவர்களிடம் அவதிப் பட முடியாது. இதோ இந்த சிம்சுபா மரக்கிளையில் தூக்கிப் போட்டு உயிரை நீத்துக் கொண்டு விடுகிறேன்.
தொடரும்

கண் தெரியவில்லை




ஆர். கோபி கிருஷ்ணா

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் ஒரு பணக்காரக் கிழவி வசித்து வந்தாள். அவளுக்குக் குழந்தைகள் இல்லை. உற்றார் உறவினரும் கிடையாது. அரண்மனை போன்ற பெரிய மாளிகையும், வீடு நிறைய வெள்ளிப் பாத்திரங்களும் விலை உயர்ந்த பண்டங்களும் நிறைந்திருந்தன. ஆனால் கிழவிக்குக் கண் பார்வை சரியில்லை. நாட்கள் செல்லச் செல்லக் கண்கள் சிறுகச் சிறுக ஒளியை இழந்து கொண்டிருந்தன.

அடுத்த நகரத்தில் திறமையான கண் வைத்தியர் ஒருவர் வசித்து வந்தார். அவரை அந்தப் பணக்காரக் கிழவி ஒரு நாள் அழைத்துத் தன் கண்களுக்கு வைத்தியம் செய்யுமாறு கேட்டுக் கொண்டாள்.

வைத்தியர் ஒரு பேராசை பிடித்தவர். கிழவியின் செல்வத்தைக் கண்டதும் அவருக்குப் பேராசை உண்டாயிற்று. எவ்விதமாயினும் கிழவியிடமிருந்து ஒரு மிகப் பெரிய தொகையைக் கூலியாகக் கறந்துவிட வேண்டும் என்று மனத்துக்குள் தீர்மானம் செய்து கொண்டார். கிழவியின் கண்களைச் சோதனை செய்தபின்னர், ''கண்களைக் குணப்படுத்தி விடுகிறேன். ஆனால் ஆயிரம் பொற் காசுகளை எனக்குக் கூலியாகத் தர வேண்டும்'' என நிபந்தனை கூறினார். கிழவியும் தனக்குக் கண்கள் முழுவதும் குணமாகி, கண் பார்வையை மீண்டும் பெற்றால், ஆயிரம் பொற்காசுகள் தருவதாகஒப்புக் கொண்டாள்.

மறு நாள் முதல் கிழவியின் கண்களுக்கு வைத்தியம் ஆரம்பமாயிற்று. நாள்தோறும் காலையும் மாலையும் வைத்தியர் கிழவியின் வீட்டுக்கு வந்து சென்று கொண்டிருந்தார். ஒவ்வொரு முறையும் கிழவியின் வீட்டிலிருந்து திரும்பிச் செல்லும்போது கிழவிக்குத் தெரியாமல் ஒவ்வொரு வெள்ளிப் பாத்திரமாகத் திருடி, தம் மருந்துப் பெட்டியில் ஒளித்து வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். இவையெல்






லாம் கிழவிக்குத் தெரியும், இருந்த போதிலும் கிழவி மிகவும் சாமர்த்திய மாய்க் கண்டும் காணாதது போல் நடித்து வந்தாள்.

சிறிது காலம் சென்றபின், கிழவியின் கண்கள் மீண்டும் ஒளியைப் பெற்றன. இப்பொழுது கிழவிக்குக் கண்கள் மிக நன்றாகத் தெரிய ஆரம்பித்தன.

கண் வைத்தியர் தாம் முன்பு பேசிய நிபந்தனையின்படி ஆயிரம் பொற்காசு களைத் தருமாறு கிழவியிடம் கேட்டார். ஆனால் கிழவியோ, ''வைத்தியரே! தங்கள் சிகிச்சைக்கு மிக நன்றி. எனக்குக் கண் பார்வை முழுவதும் வந்தபாடில்லையே. அப்படியிருக்க நான் தங்களுக்கு எவ்விதம் ஆயிரம் பொற் காசுகள் தர முடியும்?'' எனக் கூறித் தர மறுத்து விட்டாள்.

கோபமடைந்த வைத்தியர் அவ்வூர் அரசனிடம் சென்று கிழவியின் கூற்றைக் கூறி, அவர்களுடைய ஒப்பந்தத்தின்படி கிழவி தமக்கு ஆயிரம் பொற் காசுகள் தர மறுப்பதாய்ச் சொல்லி, தமக்கு நியாயம் வழங்கும்படி முறையிட்டார். அரசரும் கிழவியை அழைத்து வருமாறு கூறி விசாரணை செய்தார்.

அரசர் கிழவியை நோக்கி, ''என்ன கிழவி! கண் பார்வையை மீண்டும் பெற்றால் வைத்தியருக்கு ஆயிரம் பொற் காசுகள் தருவதாக ஒப்புக் கொண்டது உண்மையா?'' என வினவினார்.



அதற்குக் கிழவி, ''ஆம், அரசே! பொற் காசுகள் கொடுப்பதாக ஒப்புக் கொண்டது உண்மைதான்! ஆனால் எனக்குக் கண் பார்வை முழுவதும் வந்தபாடில்லையே!'' என்று பதில் கூறினாள். இதைக் கேட்ட வைத்தியர், ''அரசே! கிழவி பொய் கூறுகிறாள். அவளுக்குக் கண்கள் மிக நன்றாகத் தெரிகின்றன. ஆனால் வேண்டுமென்றே தெரியவில்லை எனப் பொய் கூறித் தங்களை ஏமாற்றுகிறாள்!'' எனக் கூறினார்.

உடனே கிழவி, ''வைத்தியம் செய்து கொள்ள ஆரம்பிப்பதற்கு முன்னால் என் வீட்டு அலமாரிகள் நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்த வெள்ளிப் பாத்திரங்களும், விலைமதிப்பற்ற பண்டங்களும் என் கண்களில் படவில்லையே! எதைக் கொண்டு எனக்குக் கண் பார்வை முழுவதும் வந்துவிட்டது என வைத்தியர் கூறுகிறாரோ தெரியவில்லை. எதற்கும் வைத்தியரைத் தாங்கள் நன்றாக விசாரிக்க வேண்டும், அரசே!'' எனக் கிழவி கேட்டுக் கொண்டாள்.


இதைக் கேட்டவுடன் வைத்தியரின் உடல் நடுங்க ஆரம்பித்தது. கிழவி அரசனிடம் ஒவ்வொரு முறையும் வைத்தியர் தன் வீட்டை விட்டுச் செல்லும் போது எவ்விதம் தன் வெள்ளிப் பாத்திரங்களையும், விலை உயர்ந்த பண்டங்களையும் திருடித் தம் மருந்துப் பெட்டியில் ஒளித்து வைத்து எடுத்துச் சென்றார் என்பதை விவரமாய் எடுத்துக் கூறி, என் ஆஸ்தியை இழந்த தோடில்லாமல் மேற்கொண்டு ஆயிரம் பொற் காசுகளை எப்படி நான் தருவேன்' எனக் கேட்டாள்.

அரசர் கண் வைத்தியரிடம் உண்மையைக் கூறுமாறு கட்டளையிட, வைத்தியரும் தாம் செய்த பிழைகளை ஒப்புக் கொண்டு தம்மை மன்னிக்கும்படி வேண்டினார்.

அரசரும் கண் வைத்தியரிடம் அவர் கிழவியின் வீட்டிலிருந்து திருடிச் சென்ற வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் விலை உயர்ந்த பண்டங்கள் முழுவதையும் கிழவியிடம் திருப்பித் தருமாறு கூறியதோடல்லாமல், வைத்தியக் கூலியான ஆயிரம் பொற் காசுகளையும் கண் வைத்தியருக்குக் கொடுக்க வேண்டாம் எனக் கூறித் தீர்ப்பளித்தார்!






Bombay 28/9 [illegible]

Dear Subbulakshmi

Rajaji has told me everything about your good work in connection with Kasturba Memorial Fund by using your musical gifts. May God bless you.

Yours
[illegible]

பரிசின் அருமை

வகுப்பில் நீங்கள் ஒரு பாடத்தில் முதல் மார்க் வாங்கினால் உங்களுக்கு எத்தனை மகிழ்ச்சியாக இருக்கும்? வகுப்பிலே அந்த வருடம் நீங்களே முதல் மாணவனாகத் தேறினாலோ? இப்படியே ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேறிப் பரிசுகளும் பாராட்டுக்களும் வாங்குவீர்களானால் எத்தனை பெருமையாக இருக்கும் ? பெற்றோர் மகிழ்வார்கள், ஊரார் எல்லோரும் பாராட்டுவார்கள். இல்லையா? அப்போது என்ன செய்ய வேண்டும்? உங்கள் திறமையை, ஆற்றலை, இந்த நாடும் நாட்டு மக்களும் பயன்படும் விதத்தில் செலவிட வேண்டும்.

இப்படித் தம் திறமையை, ஆற்றலை எண்ணற்ற நல்ல பணிகளுக்காகச் செலவிட்டுக் கொண்டிருப்பவர்தான் **ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி** அவர்கள். **எம். எஸ்.** என்றதுமே உங்கள் அகமும் முகமும் மலரும். இந்த நாட்டில் பல கல்விக் கூடங்களையும், கான நிலையங்களையும், மண்டபங்களையும், மருத்துவ மனைகளையும் இன்னும் எத்தனை எத்தனையோ நல்ல காரியங்களை யெல்லாம் தம்முடைய இனிமையான சங்கீதத்தினாலேயே உருவாக்கிக் கொடுத்தவர். பாரதத்தின் ஒப்பற்ற தவப் புதல்வர்கள் பலரும் மன்னர்களும் இந்த 'அம்மா'வினுடைய பக்திமயமான கானத்தைக் கேட்டுப் பரவசம் அடைந்திருக்கிறார்கள். அதே உள்ள நிறைவுடன் பாமர இந்தியக் குடிமகனின் நல்வாழ்வுக்காக நிறையப் பாடி எளிய ரசிகப் பெருமக்களையும் மகிழ்வித்திருக்கிறார் ஸ்ரீமதி எம். எஸ்.

எவ்விதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் எத்தனையோ. நல்ல காரியங்களுக்கு நிதி சேர்த்துக் கொடுப்பதற்காகப் பாடியிருப்பவர் எம்.எஸ். சுப்பு





...வர் பெருமை Mag Say Say - MSS

...வர்கள். இப்படி அவர் தம்
...ல் இந்த நாட்டுக்குத் தொண்டு
... மகத்தான பணிக்கு வித்திட்ட
... தெரியுமா? அமரர் ராஜாஜி
...தான். 1944ம் ஆண்டு அன்னை
...ா அவர்களின் • நினைவாக
...பட்டு வந்த நிதிக்கு இசையின்
...பாருளைச் சேர்த்துத் தருமாறு
... அவர்கள் கூறினார்கள். இப்படி
...திக் கச்சேரிகளுக்கு தந்தை
... இட்ட விதை இன்று ஆலமர
...து பரப்பி வளர்ந்திருக்கிறது.
...யா பட்டங்களும், விருதுகளும்
...க்களும் அம்மாவைத்
...பந்து அடைந்தன. கவிக்குயில்
...ி தேவி அவர்கள் இந்த இசைக்
...யார மனமாரப் போற்றிப்
...ள்ளார்கள். காந்திஜி தம் கைப்
...ாட்டி எழுதிய ஒரு கடிதத்தை
... எம். எஸ். அவர்கள் மகத்
...ாக்கிஷமாக மதித்துப் போற்றி
...கள். இங்கு உள்ள படத்தில்
...கடிதத்தைக் காணலாம்.

...த்துக்கு அப்பாலும் ஸ்ரீமதி
...ரின் புகழ் பரவியிருப்பது உங்க
...நக்கு உங்கள் பெற்றோர் மூலம்
...நக்லாம்.

... உயர்ந்த வைரமானாலும் அதில்
...டி பட்டைகள் தீட்டினால்தான்
...,ம். எம்.எஸ் என்ற வைரத்தை
...ச் செய்தவர் அவருடைய வாழ்
...ன்னணியில் இருந்து கொண்டு
...களைச் செய்து வரும் அவரது
...திரு **சதாசிவம்** அவர்கள்தான்.
...த்தில் அம்மாவின் தன்னல
...வைக்காக ஆசியாவின் நோபல்

பரிசு என்று மதிக்கப்படும் **ரமான் மாக்ஸேஸே** பரிசு தரப்பட்டிருக்கிறது.

அமைதியாக, எவ்வித விளம்பரத்தையோ பலனையோ எதிர்பாராமல், பெரும்பாலான மக்களின் நல்வாழ்வுக்காக உழைப்பவர்களுக்காக வழங்கப்படுகிறது மாக்ஸேஸே அவார்டு. தம் இசையின் மூலமாகமட்டுமே லட்சோபலட்சம் ரூபாய் நிதி சேமித்துக் கொடுத்துப் பல நல்ல சமூக நலத் திட்டங்கள் நிறைவேற உதவிய ஸ்ரீமதி எம். எஸ் அவர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுவது முற்றிலும் பொருத்தமேயல்லவா ?

ரமான் மாக்ஸேஸே என்பவர் யார் ? பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர். அந்நாட்டின் விடுதலைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் பாடுபட்டவர். அநீதி, அராஜகம் இவைகளைக் கண்டு கொதித்து எழுந்தவர். மிகவும் உயர்ந்த நோக்கங்களோடு வாழ்ந்தவர். அவருடைய நினைவாக ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது இந்தப் பரிசு.

இதுவரை இந்தப் பரிசைப் பாரதத்தின் பெரியோர் பலர் பெற்றிருக்கிறார்கள். டாக்டர் சிந்தாமண் தேஷ்முக், திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன், விநோபா பாவே, கமலாதேவி சட்டோபாத்யாயா, சத்யஜித்ரே, டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன், திரிபுவன்தாஸ் கே. ப்டீல் ஆகியோர் ரமான் மாக்ஸேஸே பரிசு பெற்றவர்கள். தமிழகத்தின் தவப் புதல்விக்குக் கிடைத்துள்ள இந்த மகத்தான பாராட்டுக்களை எண்ணி நாமெல்லோரும் நன்கு நிமிர்ந்து நடக்கலாம் அல்லவா?





தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...



50 F-203 TM



நான்கு விருப்பங்கள்

கான்ஸ்தான்ஸின் உஷின்ஸ்கி

மீச்சியாவுக்கு அன்று விடுமுறை. பனிச் சறுக்கு விளையாட்டுக்குத் தேவையான கருவிகளை எடுத்துக் கொண்டான் மீச்சியா. குளிராமல் இருக்க விசேஷ உடையை அணிந்தான். உறைந்து



கிடந்த நதியின் மீதும், குவிந்து கிடந்த பனிமேட்டின் மீதும் வெகுநேரம் விளையாடினான். விளையாடி முடித்ததும் வீட்டுக்கு ஓடினான். அவன் கறுகறுப்பாகக் காணப்பட்டான். கன்னங்கள் சிவந்து தளதளவென்றிருந்தன. விளையாடியதால் அவனுக்கு ஒரே குஷி.

''அப்பா! பனிக் காலம் பிரமாதம். இக்காலம் மட்டும் எப்போதும் நீடித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!''

''ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து உனது விருப்பத்தை அதில் எழுதி வை'' என்றார் தந்தை. மீச்சியாவும் அப்படியே செய்தான்.

வசந்த காலம் வந்தது. நாளெல்லாம் பட்டாம் பூச்சியைத் துரத்திப் பிடிப்பதிலும், பூக்களைப் பறிப்பதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தான் மீச்சியா. தந்தையிடம் சென்றான்.



''வசந்த காலத்தின் மகிமையே மகிமை. இக்காலம் மட்டும் இப்படியே நீடித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!''

மறுபடியும் தந்தை நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்து, மீச்சியாவின் விருப்பத்தை அதில் எழுதச் சொன்னார். மீச்சியாவும் எழுதி வைத்தான்.

கோடைக் காலம் வந்தது. தந்தையுடன் காடு, ஏரி, பூங்கா இன்னும் எங்கெல்லாமோ சென்றான் மீச்சியா. மலை ஏறினான். காய்களைப் பறித்தான். நாய்க் குடைகளைக் கிள்ளினான். மீன் பிடித்தான். நீந்தினான். மீச்சியாவுக்கு ஒரே சந்தோஷம்.

''அப்பா! நான் என்றுமே ஓய்வு நேரத்தை இன்று போல் கழித்ததே கிடையாது. கோடைக் காலம் இப்படியே நீடிக்குமானால்....''

இந்த விருப்பமும் நோட்டுப் புத்தகத்தில் பதிவாகியது.

அடுத்து இலையுதிர்க் காலம் வந்தது. எல்லா வகைப் பழங்களும் பழுத்துக் குலுங்கின. சென்றவிடம் எல்லாம் மீச்சியா பழ வேட்டையாடினான்.

''அப்பா! இலையுதிர்க் காலம்தான் காலங்களில் மிகச் சிறந்தது'' என்றான்.

உடனே தந்தை அவன் நோட்டு புத்தகத்தை மீச்சியாவுக்குக் காட்டி, ''இதே போல்தான் மற்ற எல்லாக் காலங்களிலும் நீ கூறினாய்'' என்றார்.





தெரசர் மாது

தபால் தலை உலகம்

ஒன்றேகால் நூற்றாண்டுகளுக்குச் சற்று முன்பு வரை தபால் தலை என்றால் என்ன என்பதை உலகம் அறியவில்லை. 1840ம் ஆண்டு மே மாதம் ஒரு தபால் தலையை பிரிட்டன் வெளியிட்டது. உலகத்தின் முதல் தபால் தலையான ''பென்னி பிளாக்'' எனப்படும் விக்டோரியா மகாராணியின் தபால் தலையே இது. அந்தத் தபால் தலையில் பிரிட்டன் தன் நாட்டின் பெயரைப் பொறிக்கவில்லை. அப்பழக்கமே இன்று வரை அந்நாட்டில் வழங்கி வருகிறது. சில ஆண்டுகளில், பிரிட்டனைப் போன்று எல்லா நாடுகளும் தபால் தலையை வெளியிட்டன. ஆனால் அவைகள் நாட்டின் பெயரைத் தபால் தலைகளில் பொறித்தன. ஆரம்ப காலத்தில் தபால் தலைகளில் அந்த அந்த நாட்டு மன்னர்கள் அல்லது அந்நாட்டை ஆள்பவர்களின் தலைகளே இடம் பெற்றன. அதனால்தான் அவை தபால் தலைகள் என்ற பெயரும் பெற்றன. ஆரம்பத்தில் கத்திரியால் கத்திரித்துத்தான் தபால் தலைகளை விற்பனை செய்தார்கள். காரணம் இப்பொழுது போல் தபால் தலை ஓரங்களில் கிழித்தெடுக்க வசதியாக அப்பொழுது துளையிடப்படவில்லை. பிறகுதான் நாளடைவில் இம்முறை கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரையில் தபால் தலை சேகரிப்பது ஓர் அபூர்வமான பொழுதுபோக்காகத்தான் இருந்தது. 1875–ம் ஆண்டுக்குப் பிறகுதான் அது பிரபலம் அடையலாயிற்று. உலகிலேயே முதல் தபால் தலை சேகரிப்பாளர் யார் என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் இது எந்த நாட்டினரையும், எந்த வயதினரையும் கவரக்கூடிய ஒரு சிறந்த பொழுதுபோக்கு ஆகும். முதலில் பிரிட்டனைச் சேர்ந்த டாக்டர் ஜான் எட்வர்டு கிரே *(Dr. John Edward Gray)* பிரான்ஸைச் சேர்ந்த விக்டர் வெட்செல் *(Victor Wetzel)* போன்றவர்கள் தபால் தலை சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார்கள். பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரு பள்ளிக்கூட ஆசிரியர் தபால் தலைகள் மூலம் பூகோள பாடத்தையே தம் மாணவர்களுக்கு விளக்கினார்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், பெஞ்சமின் பிராங்க்ளின், பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் ஆகியோரும் தபால் தலை சேகரிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார்கள். இரண்டாம் எலிஸபெத் ராணியும் அதிக ஆர்வம் காட்டி வருகிறார். இவருடைய பாட்டனாரான ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அபூர்வமான தபால் தலைகள் பல சேர்த்திருந்தார். விலைமதிப்பற்ற தபால் தலைகள்கொண்ட முந்நூறு ஆல்பங்களை அவர் பக்கிங்ஹாம் அரண்மனையில் வைத்திருந்தார். இன்று அவைகளை லண்டனில் பிரிட்டிஷ் மியூஸியத்தில் பார்வைக்காக வைத்துள்ளனர்.

உலகில் அபூர்வமான தபால் தலைகள் ஏராளமாக உள்ளன. ஆனால் அவை எல்லாவற்றையும் இங்கு குறிப்பிடப் போதுமான இடமில்லை.

தபால் தலைகள் ஆரம்ப காலத்தில் செவ்வக வடிவத்தில்தான் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இன்றும் பெரும்பாலும் தபால் தலைகள் செவ்வக வடி-





வத்தில்தான் வெளியிடப்படுகின்றன. அச்சுக் கலையில் புதிய முறைகள் மலரத் தபால் தலைகளிலும் புது வடிவங்கள் தோன்றின. சதுரம், முக்கோணம், டயமண்ட் போன்ற வடிவங்களில் தபால் தலைகளைத் தபால் இலாகாவினர் வெளியிட்டுள்ளனர்.

சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு தான் நன்னம்பிக்கை முனையிலிருந்து முதல் முக்கோண வடிவத் தபால் தலை வெளியாகியது. அதைத் தொடர்ந்து போலந்து, ஹங்கேரி, மலேயா, ஸான்மேரினு, சீனு போன்ற பல நாடுகள் முக்கோண வடிவில் தபால் தலைகளை வெளியிட்டன.

நாளடைவில் முக்கோண வடிவத்தில் பலவித மாறுதல்களுடன் தபால் தலைகள் வெளியிடப்பட்டன.

இரு சம பக்க முக்கோண வடிவிலும் தபால் தலை வெளியாகியுள்ளது. மலேசியா இந்த வடிவில் தபால் தலைகளை வெளியிட்டுள்ளது.

டைமண்ட் வடிவில் வெளியாகியிருக்கும் தபால் தலைகளுக்கு உதாரணமாக 1962ல் நடந்த மோட்டார் சைக்கிள் பந்தய நினைவாக ஹங்கேரி வெளியிட்ட தபால் தலையைச் சொல்லலாம். அண்மையில் நம்நாட்டில் நமது பிரதமர் இந்திராவின் தாயார் கமலா நேரு உருவப் படம் இவ்வாறு வெளியாகியுள்ளது. (தலைப்புப் படம்)

தபால் தலைகளை வெளியிடுவதில் பல நாட்டுத் தபால் இலாக்காக்களும் போட்டி போட்டுக் கொண்டு பல புதுமைகளையும் கையாண்டு வருகின்றன. இதனாலேயே ஆரம்ப காலத்தில் நாடுவாரியாக மட்டும் தொகுத்துச் சேகரித்த தபால் தலை சேகரிப்பாளர்கள் தங்கள் சேகரிப்பிலும் புது வழிகளைக் கையாள ஆரம்பித்தனர்.

ஆரம்பத்தில் தபால் தலைகளில் அரசர்களின் தலை அல்லது நாட்டை ஆண்டவர்களின் தலைகளை மட்டும் வெளியிட்டு வந்த தபால் இலாகாவினர் நாளடைவில் சிறப்புத் தபால் தலைகளை வெளியிடும் முறையினை அமுலுக்குக் கொண்டு வந்தனர். இவ்வாறு சிறப்புத் தபால் தலைகளை வெளியிடும் பொழுது எந்தக் காரணத்துக்காக அத்தபால் தலைகளை வெளியிட்டனரோ, அதைப் பற்றிய விவரங்கள் அடங்கிய சிறு குறிப்புத் தாளையும், அத்தபால் தலைகள் மட்டும் ஒட்டப்பட்ட சிறப்பு உறைகளையும் வெளியிட ஆரம்பித்தனர். இந்த உறைகளே முதல் நாள் உறைகள் *(First day covers)* எனப்படுவது. இவ்வாறு வெளியிடப்படும் முதல் நாள் உறைகளைச் சேகரிப்பதும்



இடி இடித்ததா
மின்னல் மின்னியதா
மழை பொழிந்ததா?

அடுத்த இதழ் கோகுலம் பார்த்தால் தெரிகிறது!

தபால்தலை சேகரிப்பில் ஒரு முறையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

தபால் தலைகளில் இடம் பெற்ற படகு, கப்பல், ரயில், ஆகாய விமானம் போன்ற வாகனங்களையும் தொழில், விண்வெளி, பிராணிகள் விளையாட்டு என்று தனித்தனி தலைப்பு தந்து தொகுக்கலானார்கள். பல நாடுகளும் தங்கள் நாட்டின் உடைகளையும், பழக்கவழக்கங்களையும் தபால் தலைகளில் வெளியிட்டுச் சிறப்பித்தன. இதையும் ஒரு தலைப்பாகக் கொண்டு சேகரிக்கலானார்கள். இவை தவிர செஞ்சிலுவைச் சங்கம், தபால் தலை நினைவு நாள், குழந்தைகள் நலன், சுகாதாரம், உணவு, கொடிகள், சுதந்திர தினம் என்று பல வகையான தலைப்புக்கள் கொடுத்துச் சேகரிக்கலானார்கள்.

தபால் தலைகள் எல்லாவற்றையும் சேகரிப்பது முடியாத காரியம். அதனால்தான் தங்களுக்குப் பிடித்தமான நாடுகளின் தபால்தலைகளையாவது,— பிடித்தமான தலைப்புக்கேற்றபடியாவது தபால் தலைகளைச் சேகரிக்க ஆரம்பித்தனர்.

தபால் தலைகளைப் பற்றி இவ்வளவு தூரம் அறிந்துகொண்ட நீங்கள் இன்றிலிருந்தே தபால் தலைகளைச் சேகரிக்கத் தொடங்குவீர்களோ என்னவோ? தபால் தலைகளைச் சேகரித்தால் மட்டும் போதாது. அவைகளுக்கேற்ற ஆல்பங்கள் தயார் செய்வது, அவைகளைப் பாதுகாக்கும் முறை ஆகியவைகளை எல்லாம் அறிந்திருக்க வேண்டும்.

பொதுவாகத் தபால் தலைகளை உபயோகித்தவை *(used Stamps)* உபயோகப்படுத்தாதவை *(Mint Stamps)* என்று இரு வகைகளாகப் பிரிக்கலாம். முதல் வகை தபால் தலைகளைச் சேகரிக்கும் பொழுது தபால் முத்திரை அடர்த்தியாக விழாததாகப் பார்த்துச் சேகரிக்க வேண்டும். ஏனென்றால் தபால் முத்திரை மொத்தையாக விழுந்திருந்தால் தபால் தலையைப் பற்றிய விவரங்களும் புரியாது. அது உங்கள் அழகிய ஆல்பத்தையும் கெடுத்துவிடும்.

நாடுவாரியாகத் தொகுக்கப்படும் தபால் தலைகளை ஒட்டுவதற்கு ஏற்ற வகையில் ஏராளமான ஆல்பங்கள் வெளிவந்துள்ளன. உங்கள் சேகரிப்புத் திறமைக்கு ஏற்ற வகையில் ஓர் ஆல்பத்தை வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் தலைப்புக்கேற்றபடி தபால் தலைகளைச் சேகரிப்பதானால் அவைகளை ஒட்டுவதற்குரிய ஆல்பத்தை நீங்களே தயார் செய்து கொள்ளலாம்.

ஆல்பத்தில் ஒட்டாத தபால் தலைகளையோ அல்லது ஒட்டும் வரையிலாவது தனியாக வைத்திருக்காதீர்கள். அவைகள் சேதமாகிப் போகலாம். எனவே, எப்பொழுதும் ஆல்பத்தில் ஒட்டாத தபால் தலைகளைக் காகித உறைகளிலோ அல்லது கண்ணாடித்தாள் உறைகளிலோ போட்டு வையுங்கள். அப்படி வைக்கும்போதே அவைகளை இனவாரியாகப் பிரித்து வைத்தால் இன்னும் நல்லது.

தபால் தலைகளை உறைகளிலிருந்து பழுதுறாமல் எடுப்பது எப்படி? தபால் தலைகள் ஒட்டி வரும் உறைகளிலும் கடிதங்களிலும் தபால் தலை ஒட்டி இருக்கும் பகுதியைச் சுற்றிலும் சிறிது இடம் விட்டு வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு டம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் தபால் தலையுடன் வெட்டி எடுத்த பகுதியைச் சிறிது நேரம் ஊற விடுங்கள். தபால் தலையின் பின்னால் ஒட்டியிருக்கும் காகிதத்திலிருந்து தபால்தலையைச் சுலபமாக எடுக்க முடியும் வரை ஊற வேண்டும். தபால் தலையைத் தனியாக எடுத்தானதும் அதைப் பிளாட்டிங் பேப்பரில் வைத்து அழுத்தித் தண்ணீரை எடுத்து விட்டு ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் தபால் தலையை உலர விடுங்கள். தபால் தலை எந்தவித சேதமும் இல்லாமல் நல்லநிலையில் உங்களுக்குக் கிடைக்கும்.



நூல்கள் பலவும் கற்கணும்!

பாலர் எல்லாம் வந்து நானும்
பகரும் வார்த்தை கேட்கணும்;
நூலகத்தில் சென்று தினமும் ,
நூல்கள் பலவும் கற்கணும்!

நூல்கள் பலவும் கற்றே அதனின்
நோக்கம் கொண்டு வாழணும்;
நீள்முன் னோர்கள் காட்டும் நல்ல
நெறிகள் பூண்டே ஒழுகணும்!

கீதை கற்றுச் சாற்றும் வழிகள்
கேட்டு வாழ்வில் ஒழுகணும்;
பாதை செம்மை யாக மாறிப்
பலரும் போற்ற வாழணும் !

குறளைப் படித்துக் கூறும் நெறிகள்
கொண்டு மனத்தில் வாழணும்;
அறனும் அன்பும் கொண்டு நீங்கள்
அவனி புகழ வாழணும்!

பைபிள் தன்னைப் படித்தே அந்தப்
பாதை என்றும் ஒழுகணும்;
ஐயம் நீங்கிப் புவியே போற்ற
அடக்க மாக வாழணும்!

குர்ரான் ஓதி என்றும் நீங்கள்
குறைவில் லாமல் வாழணும்;
துர்எண் ணங்கள் நீங்கி என்றும்
தூய ராக வாழணும்!

காரை கே. எஸ். மதிஒளி





நமது கொடி

ஒன்று கூடி யாவரும்
உரிமை வேண்டி காந்தியின்
அன்பு வழியில் பெற்றநல்
அருமை யான கொடியிது !

சத்தி யத்தைக் கரங்களில்
தாங்கி நின்று வெள்ளையன்
சித்தம் தன்னை மாற்றிய
சீலன் தந்த கொடியிது !


சண்டை யின்றி நாட்டிலே
தருமப் பயிரை எங்குமே
கண்ட காந்தி பெருமகன்
காட்டிச் சென்ற கொடியிது !


நாட்டு மக்கள் யாவரும்
நாங்கள் எல்லாம் ஒன்றென
காட்டி நின்ற உறுதியில்
காந்தி தந்த கொடியிது !

தேச மக்கள் காந்தியை
தேவ னாக ஏற்றபின்
பாச மோடு உரிமையாம்
பாடம் தந்த கொடியிது .

அடிமை யாகி அந்நியன்
ஆட்டி வைத்த கொடுமையால்
துடித்து எழுந்த வீரரின்
தியாகம் தந்த கொடியிது !

அழகனூர்


2
பாலுவும்
பாட்டில் பூதமும்
கதை: வாண்டு - சித்திரம்: செல்லம்
பாலுவின் அப்பா ஆபிஸில் இன்ஸ்பெக்ஷனும். ஒரு வாரமாகச் சூடாக இருந்தார்.
பாலு காலை வேளையிலே என்னடா விளையாட்டு? எனக்கு நேரமாகிவிட்டுது. பூட்ஸுக்குக் கொஞ்சம் பிரஷ் போட்டு வை...ம்...
பாலுவின் பாட்டில் பூதம் பற்றி அவன் பெற்றோர்களுக்குத் தெரியாது.
மேன்மை தங்கிய என் பிரபுவிடம் உத்தரவிட்டு வேலை வாங்க நீ யார்?
ஏய், ஏய்! பாட்டில் பூதமே... ஷோர்தில். நிறுத்து நிறுத்து! அது என் அப்பாவாக்கும்.....
பிரபுவே! அவர் உங்கள் தந்தை என்பது எனக்குத் தெரியாது. உங்களை விரட்டுவது கண்டு...
சரி, சரி! இந்தப் பூட்ஸ்களுக்குச் சீக்கிரம் பாலிஷ் போட்டுக் கொடு.
இதென்ன அதிசயம்?
இப்படி ஒரு வேலைக்காரன் இவனுக்கு எப்படிக் கிடைத்தான்?
பாலு தன் பெற்றோர்களிடம் பாட்டில் பூதம் தனக்கு அடிமையான வரலாற்றை விவரமாக கூறுகிறான்.
அப்போ இனிமே பாலுவை ஒழுங்காகக் கவனிச்சுப்பேன்னு சொல்லு. முதலிலே அவனைக் கிராப் வெட்டிக்கச் சொல்லு பார்க்கலாம்!
ஐயா, இந்தக் கத்தியிலா? வேண்டாம், தெருக் கோடியில் நல்ல சலூன் இருக்கு
ஹிப்பி முடியை இழக்கப் பாலுவுக்கு விருப்பமில்லாவிட்டாலும் பெற்றோரைத் திருப்திப்படுத்த சம்மதித்தான்.
ஷோர்தில், அவர்கள் வேண்டாம். இவர்தான் நன்றாக வெட்டுவார்.


கொள்ளுவது இழுக்கு. அவர் விரும்பி உட்காரும் இடத்தில் நீ உன் கத்தியை இயக்கு!
என் எஜமானருக்கு வலி இல்லாமல் பிசிர் அடிக்காமல் கச்சிதமாக முடி வெட்ட வேண்டும், தெரிந்ததா?
பிடிக்குமே என்று வெல்லச் சேவை செய்தேன் டீபனுக்கு...
அப்பாவுக்கு மட்டும் அத்தனை, எனக்கு இத்துனூண்டா?
பிரபுவே! உங்கள் குறை நியாயமானதே. சாப்பாட்டில் இம்மாதிரிப் பாரபட்சம் கூடாது. வளரும் குழந்தை நீங்கள். உங்களுக்கே அதிகம் தரப்பட வேண்டும். இதோ...
பாட்டில் பூதத்தின் உருவமும் அதன் கையில் பட்டாக்கத்தியும் பாலுவின் பெற்றோர்களைப் பெட்டிப்பாம்பாக அடக்கின. மூக்குமுட்ட வெல்லச்சேவையை பாலு சாப்பிட அவர்கள் பாவம்....
இந்த அடிமைப் பூதம் நம் பாலுவை விட்டு அரைக்கணமும் நகராது போலிருக்கே!
இப்படி ஒரு அடிமை கிடைத்தது பாலுவின் பாக்கியம் தான். அது சரி ஷேர் தில்லுக்குச் சோறு தண்ணி வேண்டாமா? பாவம் ஏதுமே கேட்கவில்லையே!

மந்திரக் கம்பளம் 11



வாண்டுமாமா

அது ஒரு பயங்கரமான போர். தன்னுடைய பரம விரோதியான அக்கினி அரக்கனின் பெயரைக் கேட்டதும் பனி அரக்கனிடம் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு கீர்த்தி வியந்து போனான். தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த அந்தப் பனி மிருகம் வெகு வேகமாகத் தனது சீதளக் குழியை நோக்கி விரைந்தது. போகும் போது சுற்றுச் சூழலில் இருந்த பாறைகளில் எல்லாம் தனது பயங்கரமான மூச்சுக் காற்றை உமிழ்ந்து எங்கும் எதிலும் பனிப் படலங்களைப் பாறையாக உறையும்படி செய்து விட்டுப் போயிற்று. கண்ணுக்கெட்டிய தூரம் வரை, எல்லா இடங்களையும் வெண்பனி மூடியது. எங்கு நோக்கினாலும் தகதகவென்று பனிக் கட்டிகள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. மிக மிகக்கடுமையான சீதளத்தை உற்பத்தி செய்ததினால் பச்சை மரங்கள் எல்லாம் தங்கள் இலைகளை உதிர்த்து மொட்டையாக நின்றன. வானத்திலே பறந்து கொண்டிருந்த பறவைகள் பனி அரக்கனுடைய சீதள மூச்சுக்காற்றின் குளுமை தாங்காமல் விரைத்துப் போய்க் கீழே விழுந்தன. இப்படிப் பனி அரக்கன் தனது இருப்பிடம் நோக்கிச் செல்லும்போது அந்தச் சூழ்நிலையைச் சொல்லுக்கு அடங்காத குளிர்ச்சிக்கு உள்ளாக்கி விட்டது.

பனி அரக்கனின் இந்த முன்னேற்பாடுகளை யெல்லாம் முறியடிக்கும் வல்லமை அக்கினி அரக்கனுக்கு உண்டா? பொறுத்திருந்து பார்ப்போம் என்று ஆவலுடன் அதன் வரவை எதிர்நோக்கி நின்றான் கீர்த்தி. அக்கினி அரக்கனும் மூர்க்காவேசத்துடன் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தான். தீக்கொழுந்து போன்ற தனது இறக்கைகளை வீசிக் கொண்டு பறந்து வந்தான். அது அருகே நெருங்க நெருங்கப் பனி அரக்கனால் உருவாக்கப்பட்ட பனிக் கட்டிக



ளெல்லாம் உருகலாயின. அதனால் நெருப்பரக்கனுடைய உஷ்ணம் அந்தப் பிராந்தியத்தில் அமுங்கிப் போயிற்று. வேறு இடமாக இருந்தால் அதனுடைய கோபத்துக்கும் சீற லுக்கும் அது கக்கிய தீஜ்வாலைக்கும் எல்லாம் வெந்து சாம்ப லாகிப் போயிருக்கும். ஆனால் அத்தனை வெப்பத்தையும் பனி அரக்கனின் சீதளம் 'ஸ்வாஹா' செய்துவிட்டதைக் கண்டு கீர்த்திக்கு வியப்பான வியப்பு.

மிருகங்கள் இரண்டும் ஒன்றை ஒன்று தாக்குவதற்கு ஏற்ற தூரத்தில் நெருக்கமாக வந்தன. இனிமேல்தான் யார் பலசாலி என்பது தெரிய வேண்டும் என்று ஆவலுடன் உன்னிப்பாகக் கவனிக்கலானான் இளவரசன் கீர்த்தி வர்மன். திடீரென்று நெருப்பு அரக்கனின் உடலிலிருந்து திகுதிகு வென்று நீலமும் மஞ்சளுமாகக் குபீர் குபீர் என்று தீப் பிழம்புகள் கொழுந்து விட்டு எரிந்தன. அதன் மூக்குத் துவாரங்களிலிருந்து நீர்த்துறைப் போல் நெருப்புப் பீச்சி யடித்தது. வாயைத் திறக்கும்போ தெல்லாம் பயங்கரமான ஓசையுடன், காளவாய் போல... அக்கினி அரக்கனுக்கு மூர்க்காவேசமான கோபம் வந்தால் எப்படி இருக்கும் என் பதைக் கண்கூடாகக் கண்டான் கீர்த்தி. எரிமலையே இடம் பெயர்ந்து வந்தது போலத் தனது நெருப்புக் கைகளால் பனி அரக்கனின் உடலிலே ஓர் அடி கொடுத்தது அது.

அடுத்த விநாடி பனி அரக்கனிடமிருந்து நீராவி யந்திரம் வெடித்தது போல ஒரே வெண் புகையாக 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் நீராவி வெளிப்பட்டு அக்கினி அரக்கனை யும் ஏன், அந்தப் பிரதேசம் முழுவதையுமே மூடிக் கொண் டது. அந்த நீராவி மூட்டத்துக்குள் என்ன நடக்கிறது என் பதை அறிய முடியாமல் கொஞ்ச நேரம் தவித்தான் கீர்த்தி. ஆனால் இரண்டு மிருகங்களும் போடும் பயங் கரமான இடிமுழக்கம் போன்ற கூச்சல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. மெள்ள மெள்ள நீராவி மூட்டத் தின் கனம் குறைந்தது. பூதாகாரமான பனி அரக்கனின் உடலிலே கொள்ளிக் கட்டையைச் செருகி யது போல அக்கினி அரக்கன் கடித்துக் கொண்டிருந்தான். 'ஊ' என்ற அதன் தீ வாயி லிருந்து வெளிப்படும் தீ நாக்குகள் பனி உடலைப் பள்ளம் பண்ணிக் கொண்டிருந்தன. அந்தக் காயத்திலிருந்து பனிநீர் பெருக்கெடுத்து ஓடி யது. அந்த நிலையிலும் அது தன் கால்களை உறுதியாகப் பதித்து நின்று அக்கினி அரக்கனின் உடலைச் சுற்றி, வளைத்துக் கொண் டிருந்தது. மெள்ள மெள்ள அதன் உட லைத் தன் குளிர்ப் பிடிக்குள் அமுக்கி இறுக்கிக் கொண்டு அதன் இடுப்புவரை போய் விட்டது. அக்கினி அரக்கனின்




உடலெல்லாம் கொள்ளிக்கட்டையில் தண்ணீர் ஊற்றினால் எப்படி நெருப்பு அவிந்து கரிக்கட்டை ஆகுமோ அப்படி ஆகிக் கொண்டிருந்தது. அந்த வேதனை தாங்காமல் அக்கினி அரக்கன் ஆயிரம் காண்டா மிருகங்கள் ஒன்றாகக் கூச்சலிடுவதுபோல் பயங்கரமாகக் கதறியது. அதன் பிடிக்குள் அகப்படாத முன்னங் கால்களினால் பனி அரக்கனின் பனிங்கு உடலையும் முகத்தையும் வெறிகொண்டு மாறி மாறித் தாக்கியது. கொம்பினால் குத்திக் குதற முற்பட்டது. இத்தனைக்கும் பனி அரக்கன் தன் பிடியைத் தளர்த்தவில்லை. அந்தத் தாக்குதலை அலட்சியமாக உதறிவிட்டுத் தன் உடலை உலுக்கிக் கொண்டது. அக்கினியின் தாக்குதலால் அதன் பனி உடலில் பல பாகங்களில் காயம் பட்டிருந்தது. அதிலிருந்து ஊற்றென நீர் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் அது தன் பலத்தை இழக்கவில்லை. மேலும் மேலும் அதைத் தன் பிடிக்குள் அழுத்த அக்கினி அரக்கனின் உடலைத் தழுவியபடி மேல் நோக்கிப் போய்க்கொண்டிருந்தது பனி அரக்கன்.


கீர்த்தி வியப்பினால் கண் இமைக்கவில்லை. பயங்கரமான 'நெருப்பு எப்படி உஷ்ணமிழந்து போய் விட்டது! பனி நீராவியானாலும் பலம் குன்றவில்லையே! ஆனால் இரண்டு கொடிய மிருகங்களிலும் கீர்த்திக்கு அக்கினி அரக்கனைத் தான் பிடித்திருந்தது. விரோதியானாலும் கொடியவனானாலும் பார்ப்பதற்குக் கௌரவமான மிருகம் அக்கினி அரக்கன்தான். பனி அரக்கனின் பூதாகாரமான தலையும் நீண்ட கழுத்தும், மொழுமொழு உடலும் ஒன்றுக் கொன்று பொருத்தமில்லாத அமைப்பு. சுத்த அவலட்சணம். 'இரண்டு மிருகங்களையும் மோத விட்டவன் இப்படி மௌனமாக இருப்பது முறையற்ற செயல்' என்று எண்ணினானோ என்னவோ திடீரென்று கூச்சலிட்டான் கீர்த்தி.

''பனி அரக்கனே! விடாதே, உன் பிடியைத் தளர்த்தாதே... ம்...ம்.... வெற்றி உனக்கே'' என்றவன் உடனே குரலை இன்னும் உயர்த்தி ''அக்கினி அரக்கனே! கலங்காதே!... நெருப்பை உமிழ்வதை நிறுத்தாதே! உன் விரோதியை உருக்கியே ஒழித்துக்கட்டு!'' என்று உற்சாகமூட்டினான்.

அத்தகைய பயங்கரமான மூர்க்கமான போராட்டத்தை அதுவரையில் யாருமே பார்த்திருக்க முடியாது. வல்லமையில் ஒன்றுக்கொன்று சளைக்கவில்லை.

கீர்த்தி பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் போராட்டத்தில் திடீரென்று ஒரு திருப்பம் ஏற்படுவதைக் கண்டான். பனி அரக்கன் தான் சுற்றிக் கொண்டிருந்த அக்கினி அரக்கனைத் தப் பிடியிலிருந்து விடுவித்து மெள்ள மெள்ளப் பின்நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அதன் உடலிலிருந்து ஆங்காங்கே 'புஸ் புஸ்' என்று சீறியபடி கிளம்பும் நீராவியின் வேகத்திலிருந்து பனி அரக்கனின் உடலில் ஏராளமான காயங்கள் ஏற்பட்டு விட்டதை உணர்த்





''உன்னுடைய விஷமம் ஒவ்வொன்றுக்கும் என் தலையில் ஒரு முடி நரைத்துப் போகிறது.''

''நீங்க பண்ணின விஷமத்தில் தாத்தா தலை எப்படி ஆயிடுத்து பாவம்!''

தின. அக்கினி அரக்கனின் நிலையும் கூட மோசமாகத்தான் இருந்தது. அதன் பின்னங் கால்களும் இடுப்பு வரையுள்ள பாகமும் கரிக்கட்டையாகக் கறுத்து விட்டன. அந்தப் பகுதிகளில் அதன் உடலில் நெருப்போட்டம் அற்றுப் போய்விட்டது. ஏன், கொம்புகளும் கூடக் கறுப்பாகி விட்டன. அதன் முகமும் இதயப் பகுதியும் மட்டுமே செந்தணலாகத் தகதகத்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அதற்குக்கூட அத்தனை வெப்பமோ தகிப்போ இல்லை.


மெள்ள மெள்ளப் பின்வாங்கும் பனி அரக்கனை நோக்கிக் கத்தினான் கீர்த்தி. ''விடாதே பின்வாங்காதே பனி அரக்கனே! அக்கினியின் உடலில் பாதி அணைந்து விட்டது. அதன் உஷ்ணம் தணிந்து கொண்டிருக்கிறது. முழு மூச்சுடன் இன்னும் ஒரு தாக்குதல் நடத்தினால் அதைக் குளிர வைத்து விடலாம். பனி அரக்கனே பணிந்து விடாதே!''


கீர்த்தியின் தெம்பூட்டும் வார்த்தைகளினால் திரும்பிக் கொண்டிருந்த பனி அரக்கன் சட்டென்று நின்றது. அதன் உடலிலிருந்து பீறிட்டுக் கொண்டிருந்த நீராவி நின்றது. 'கிரீச்'சென்று பயங்கரமாக ஓலமிட்டது. அது பலமிழந்துபோயிருந்த தென்னவோ உண்மைதான். ஆனாலும் பனி அரக்கன் தன் உடலின் பலத்தை யெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு திரும்பியது. வெகு வேகமாகப் பனிப் பாறைகளிலே வழுக்கியபடி அக்கினி அரக்கனை மறுபடியும் சூழ்ந்து சுற்றிக் கொண்டது. எதிரியின் உடலில் முன்போல அத்தனை தகிப்பு இல்லை — இதயப் பகுதியைத் தவிர.


அக்கினி அரக்கனும் லேசுப்பட்டதா? அடிபட்ட வேங்கையைப் போல, காயம் பட்ட பாய்ச்சல் காளையைப் போல, உறுமிக் கொண்டு நின்றது. அதன் பின்னங்கால்கள் முழங்கால் வரை பனியில் புதைந்து கிடந்தன. அதில் தகிப்பில்லை; வெப்பமில்லை. நெருப்பணைந்து போய் உணர்விழந்து கிடந்தன. பனி அரக்கன் தன் உடல் மீது சுற்றிக் கொண்டு ஏறுவதைக் கூடப் பாவம் அதனால் தடுக்க முடியவில்லை. அத்தனை தணலிழந்து நெருப்பிழந்து, தகிப்பிழந்து போய்க் கிடந்தது அக்கினி அரக்கன்.

''அக்கினி அரக்கனே!'' கத்தினான் கீர்த்தி. ''ஏன் இப்படிச் செயலிழந்து போய்விட்டாய்? கலங்காதே. உன் பலம் இன்னும் போய்விடவில்லை. பனி அரக்கன் படுகாயமடைந்து விட்டான். பயப்படாதே. ஓங்கி ஒரு போடு போடு. உருகி உருக்குலைந்து போவான்'' என்று உற்சாகமூட்டினான். அவனுக்குப் பயம், பனி அரக்கன் வெற்றி பெற்றால் அதன் பயங்கரமான சீதளத்திலே மூழ்கிக் கிடக்கும் அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் வெட்டி எடுப்பது ரொம்பக் கடினமான காரியமாயிற்றே என்று.

கீர்த்தியின் வார்த்தைகளால் தெம்பு கொண்ட அக்கினி அரக்கன் தன் உயிர் மூச்சை யெல்லாம் நெருப்பாக்கி ஊது







உலையைப் போல அதில் உஷ்ணத்தை உற்பத்தி செய்து தன் நெஞ்சருகே வந்துள்ள பனி அரக்கனின் முதுகெலும்பிலே போய்ப் பதியும்படி தனது ஈட்டி போன்ற பற்களைப் பதித்துக் குதறியது. அதே விநாடியில் பனி அரக்கன் தன் முழு பலத்துடன் அக்கினி அரக்கனின் இதயத்தை அழுத்திப் பிடித்து அங்கு மட்டுமே கனன்று கொண்டிருந்த நெருப்பை அவித்துப் 'புஸ்' என்று நீராவியாகப் போகச் செய்தது. ஒரே சமயத்தில் இரண்டு கொடிய மிருகங்களும் ஒன்றை ஒன்று மாய்த்தபடி தரையில் சாய்ந்தன. பிரும்மாண்டமான காளவாய் அவிந்தது போலிருந்தது. அக்கினி அரக்கன் இறந்து கிடந்த நிலை. பனி அரக்கன் இருந்த இடத்திலிருந்து ஒரு பெரிய நதி உற்பத்தியாகி ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த உருவத்தைக் காணோம். அந்த ஆற்று நீரிலே அக்கினி அரக்கனின் உடல் கரிக் கட்டையாக நமுத்துப்போய் விரைத்துக் கிடந்தது.

கீர்த்தி தன் இருப்பிடத்திலிருந்து வெகு வேகமாகக் கீழிறங்கிப்போனான். இரும்பைப் போல் கிடந்த அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் தன்னிடமிருந்த மந்திர வாளினால் இரண்டே வீச்சுக்களில் வெட்டி எடுத்துக் கொண்டான். ரொம்பக் கனமாக இருந்தது. ஆனால் ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்களைக் கடக்கும் பாதரட்சைகளை அணிந்து கொண்டிருப்பதினால் நாலே தப்படிகளில் அவற்றோடு தன் அரண்மனையை அடைந்து விட்டான். நாட்டை நாசமாக்கி மக்களைப் பீதியிலாழ்த்திக் கொண்டிருந்த இரண்டு கொடிய மிருங்களை ஒரே சமயத்தில் மாய்த்ததில் அவன் மனம் மகிழ்ச்சியால் நிரம்பி யிருந்தது.


அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் மூலையில் போட்டு விட்டு 'உஸ்' அப்பாடா' என்று பெருமூச்சு விட்டான். வெப்பமும் குளுமையும் மாறி மாறித் தாக்கியதனால் அவன் உடல் வெகுவாகக் களைத்துப் போயிருந்தது. பொழுது சாயும் நேரமாகிவிட்டதைக் கண்டபோது அவன் உடலில் பரபரப்பு ஏற்பட்டது. அன்று இரவு மங்களகிரியில் குந்தளவல்லி கொடுக்கும் ஒரு விருந்தில் கலந்து கொள்ள வருவதாக வாக்களித்திருந்தது நினைவுக்கு வந்தது. உடல் சோர்வு ஓடியது. அதே வேகத்தில் குளியலறைக்கு ஓடினான் கீர்த்தி.

உன்னதமான உடையை வரவழைத்து உடுத்திக் கொண்டான். அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் ஒரு பட்டுத் துணியில் பக்குவமாகச் சுருட்டிக் கொண்டான். குந்தளவல்லியிடம் அதைக் கொடுக்கும்போது அவள் முகத்தில் தோன்றும் வியப்பு, மகிழ்ச்சி, மலர்ச்சி இவைகளைக் கற்பனைக் கண்களால் கண்டு மகிழ்ந்தபடியே பறக்கும் கம்பளத்தில் அமர்ந்தபோது இருட்டிவிட்டது.

மங்களகிரி அரண்மனையின் உப்பரிகையில் போய்க் கம்பளம் இறங்கியது. தான் மந்திரக் கம்பளத்தில் வருவதைப் பிறர் அறிந்து விடக் கூடாது என்பதில் அக்கறையோடிருந்தான் கீர்த்தி. ஆகவே, கம்பளத்தைச் சுருட்டிக் கொண்டு யாரும் அறியாதபடி அரண்மனையின் முக்கிய பகுதிக்கு வந்தான். அதுவரையில் உருவை மறைக்கும் குல்லாவை அணிந்திருந்தவன் அதைக் கழற்றி விட்டான். மந்திர ஜமுக்காளத்தையும் அக்கினி அரக்கனின் தலையும் வாலும் உள்ள பட்டுத் துணி மூட்டையையும் அங்கு ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் பதுக்கிவிட்டுக் குந்தளவல்லியைச் சந்திக்கச் சென்றான். அவன் மந்திரக் கம்பளத்தை மறைத்து வைத்த இடம் அரண்மனையின் சமையலறையை அடுத்துள்ள ஒரு மறைவிடம். குந்தளவல்லியிடம் திடும்மென்று அவன் கேட்ட பரிசுப் பொருள்களைக் கொண்டு போவது நாகரிகமற்ற செயல் என்று கருதியே கீர்த்தி அவைகளை ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுப் போனான்.

இளவரசன் தன் வாக்குப்படி விருந்துக்கு வருகை தந்ததில் குந்தளவல்லிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. கீர்த்தியும் அவளும் சூழ்நிலையைமறந்தபடி ஒருவரில் ஒருவர் மூழ்கி விட்டார்கள். விருந்து மண்டபத்தில் இளவரசன் வந்ததும் அங்கு கூடியிருந்தவர்கள் ஒருவிதமாக ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். ஏதோ ஒருவகையான அசாதாரணத்தை அனுபவிப்பவர்கள்போல ஒருவரோடொருவர் கசமுச வென்று பேசிக் கொண்டார்கள். ஆனால் கீர்த்தியோ குந்தளவல்லியோ இதையெல்லாம் கவனிக்கவே யில்லை. கீர்த்திக்கு நல்ல பசி! சுவைத்து மகிழ்ந்தான் விருந்தை. குந்தளவல்லிக்கோ காதலான காதல்! கீர்த்தியையும் அவன் பேச்சையும் கண்டு கேட்டுச் சொக்கிப் போய்க் கிடந்தான்! மற்றவர்களிடையே நிலவிய ஒருவிதத் தவிப்புக்குக் காரணம் என்ன? அது கீர்த்தியைப் பற்றியதுதானா? அப்படியானால் அது என்ன?

(தொடரும்)



தெரியுமா?

1327. உலகின் மிகப் பெரிய கடல் எது?

1328. பிளாசிச் சண்டை நடந்த ஆண்டு எது? யார் யாருக்குச் சண்டை நிகழ்ந்தது?

1329. இந்தியாவின் மிகப் பெரிய கண்டோன்மெண்ட் நம் நாட்டில் எங்குள்ளது?

1330. இந்தியாவின் மிகப் பெரிய குகைக் கோயில் எது?

1331. இந்தியாவின் மிக நீளமான அணைக்கட்டு, மிக உயரமான அணைக்கட்டு எது, எங்குள்ளது?

1332. இயற்கையில் கிடைக்கும் மிக கனமான ஓர் உலோகம் அணு சக்தி உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கிறது. அதன் பெயர் என்ன?

1333. நம் நாட்டில் மிகப் பெரிய ரசாயன உரத் தொழிற்சாலைகள் மொத்தம் எத்தனை உள்ளன? எங்கெங்கு?

1334. பாகிஸ்தான் தோன்றியது எப்போது?

1335. சாதாரண வெப்ப நிலையில் பாதரசம் என்ற உலோகம் திரவமாக இருக்கும். இப்படித் திரவமாக இருப்பதினால் இதற்கு ஆங்கிலத்தில் ஒரு பெயர் உண்டு. அது என்ன?

1336. ஆறாம் நூற்றாண்டிலிருந்து 19-ம் நூற்றாண்டு வரை மக்கள் எந்தச் சாதனத்தினால் எழுதி வந்தார்கள்?

1337. மலேரியா என்ற நோயைக் குணப்படுத்தவும் அதே சமயம் டானிக்காகவும் ஒரு மருந்து பயன்படுகிறது. அது எது?

1338. முதன் முதலில் செய்திகளை வாங்கி விநியோகிக்க ஒரு ஸ்தாபனம் 1849-ல் நிறுவப்பட்டது. இன்று அது உலகில் புகழ்பெற்ற ஒரு செய்தி ஸ்தாபனமாக விளங்குகிறது. அதன் பெயர் என்ன?

1339. ரஷ்யாவின் கடைசி அரசரின் அவையில் மிக்க செல்வாக்குடன் விளங்கிய ஒருவர் பிறகு படுகொலை செய்யப்பட்டார். புகழ்பெற்ற அவர் யார் தெரியுமா?

1340. 480 காகிதங்கள் கொண்ட ஒரு கட்டுக்கு ஆங்கிலத்தில் ஒரு பெயர் உண்டு. அது என்ன?

1341. ஹென்றி டூனண்ட் என்பவர் யுத்தத்தில் காயமடைந்த, நோய்வாய்ப் பட்டவர்களுக்கு உதவுவதற்காக ஒரு ஸ்தாபனத்தை நிறுவினார். அதன் பெயர் என்ன?

1342. முடியாட்சி இருந்த போது ஒரு நாட்டைத் தாற்காலிகமாக நிர்வகித்து ஆளுபவரை எப்படி அழைப்பார்கள்?

1343. ஜாவாவில் ஒரு மரம் பால் போன்று வெள்ளையாக ஒரு திரவத்தைத் தருகிறது. (Sap) கொடிய விஷமுள்ள இதை அம்புகளில் தோய்த்து வேட்டையாடப் பயன்படுத்துகிறார்கள். இம்மரத்தின் பெயர் என்ன?

1344. வில்லியம் ஹெர்ஷெல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட கிரகம் எது? நெப்டியூனல்ல, புளூடோவுமல்ல.

1345. ஆர்க்டிக் கடலிலிருந்து காஸ்பியன் கடல் வரையில் ஒரு மலைத் தொடர் ரஷ்யாவிலுள்ளது. அதன் பெயர் தெரியுமா?

1346. லண்டனில் நண்பகலாக இருக்கும் போது ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் என்ன நேரமாக இருக்கும்? காலை 8 மணி, 10 மணி, மாலை 5 மணி, இரவு 10 மணி.




தெரியுமே!

1327. பசிபிக் பெருங்கடல். 1328. கி.பி. 1757ல் வங்காள நவாப் சிராஜ் உத் தெளலாவுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் வங்காளத்திலுள்ள பிளாசி என்னுமிடத்தில் போர் நடந்தது. 1329. பெங்களூரில். 1330. எல்லோரா. 1331. நீளமானது ஹீராகுட், ஒரிஸ்ஸாவில். 15.8 மைல் நீளம். உயரமானது பக்ராநங்கல் பஞ்சாபில். உயரம் 740 அடிகள். 1332. யுரேனியம். 1333. ஐந்து. சிந்திரி, நங்கல், டிராம்பே, கோரக்பூர், துர்காபூர். 1334. 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 14ந் தேதி. 1335. க்விக் சில்வர். 1336. இறகு பேனாவினால். 1337. கொயினா எனப்படும் க்வினைன். 1338. ராய்டர் செய்தி ஸ்தாபனம் (Reuter News Agency) 1339. ரஸ்புடீன். 1340. ரீம். 1341. செஞ்சிலுவைச் சங்கம். 1342. ரீஜண்ட் என்று. 1343. உபாஸ் (Upas) என்ற மரம். 1344. யுரானஸ். 1345. யூரல் (Ural) மலைத் தொடர். 1646. இரவு பத்து மணி.

இப்பொழுது! யுகோபாங்க் உங்கள் டிபாஸிட்டுகளை கிட்டத்தட்ட

மும்மடங்கு ஆக்குகின்றது



நீங்கள் யுகோபாங்க் டிபாஸிட் ஸர்டிபிகேட் திட்டத்தில் பணம் போட்டு வைத்தால்!

இத்திட்டப்படி ரூ. 5000 டிபாஸிட் செய்கிறீர்கள் என்றால், அத்தொகை சரியாக 15 ஆண்டுகளில் கிட்டத்தட்ட மூன்று மடங்கான ரூ. 15,000 ஆகப் பெருகிவிடுகிறது நீங்கள் முதலில் போட்ட பணத்திற்கு இது எவ்வளவு கணிசமான தொகை! இத்திட்டம், குறைந்த தொகை ரூ 100 லிருந்து தொடங்கி அதற்கு மேல் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் போகலாம்.

தாங்களே தங்களுக்கு உதவ
மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

UNITED COMMERCIAL BANK

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-20 TAM

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்


இது ஒரு அதிசயம்தான், கண்கவர் தோற்றமுள்ள மங்கை பொதுவாக...
...அழகான ஆடைகளைத்தான் அணிகிறாள்!
AIYARS.M.456 TM



everest/508c/PP TM